# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU


| மலர்–16, இதழ் – 9<br>Volume - 16, Issue - 9 | ஆவணித் திங்கள்<br>August 2025 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |
|---|---|---|---|---|


## சுதந்திர தின வாழ்த்துகள்



HAPPY
INDEPENDENCE
DAY


"Delivered by India Post"

www.indiapost.gov.in


தொடர்ச்சியான
கால்வலி மற்றும் எரிச்சலை
சாதாரணம் என தவறாக
எண்ண வேண்டாம்
இது வெரிகோஸ்
வெயினின் ஆரம்ப
அறிகுறியாக இருக்கலாம்!
பிரத்தியேக வாஸ்குலர் துறை
வடு, வலி, தையல் இல்லா சிகிச்சை
சிகிச்சையின் நாளிலேயே வீடு திரும்பும் வசதி
பார்வதி மருத்துவமனை
044 2238 2248
www.parvathyhospital.com
241, GST Road, near MIT Bridge, Chromepet, Chennai, Tamil Nadu 600044


CELEBRATE LIKE A LANDLORD
DESTINATION
WEDDING
@
Saradharam's
LAKSHMI VILAS
HERITAGE HOTEL
NEAR VEERANAM LAKE
+91 9442591456 / 94425 91466
lakshmivilasheritage@gmail.com
http://www.lakshmivilasresort.com/
71/2, SIVANKOIL STREET, NEDUNCHERRY T. PUTHUR TAMIL NADU



# ADYAR

## PADMANABHA NAGAR

**2 BHK - 960 sqft**

**3 BHK-1920 sqft**

- Prime Location
- Stilt + 3 Floors
- Premium Finish with Interior
- Solar Panel with Net Metering

***On Going Project***

**RAM NAGAR (Madipakkam)**

**(Near Ramar Temple)**

# 2BHK-86 L

- CALM RESIDENTIAL AREA
- STILT + 3 FLOORS
- CLOSE TO MRTS STATION & VELACHERY
- TOTAL 6 FLATS - ALL 2 BHK

***Ready for Occupation***

***(Near GST Road)***

# TAMBARAM WEST

**1400 SQFT - 3 BHK**

**ONE FLOOR**
**ONE FLAT**

- *We undertake* **CONSTRUCTION CONTRACT ON TURN-KEY BASIS** *right from Design & Approval.*
- *For profitable* **JOINT VENTURE** *Land owners are invited.*

# MALAR FOUNDATIONS

**94440 70108 / 70109 41135 / 97870 61547**




Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com






**Thiruvasantham**
PURE VEG

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)

# சதாபிஷேகம் 04-07-2025

திரு. **ச. வெங்கடேசன் பிள்ளை**

திருமதி. **ஞானாம்பிகை**



* **தொழில் கற்றல் வேண்டி வெளிநாடு சென்றாலும்,**
* **நம் மண்ணில் வந்து நின்றாய் ஆலமரமாய்.**
* **பட்டங்கள் வழங்குவது பல்கலைக்கழகம்,**
* **பல பணிகளை வழங்குவது உன் பட்டறையே.**
* **உங்களின் ஆசீர்வாதங்கள் அளித்திடுமே என்றும் நல்வழிப் பாதைகள்**



என்றும் அன்புடன்

**V. முத்துக்குமரன்,** ஆசிரியர் (ஓய்வு) – சிதம்பரம்

**S. நடராஜன்,** உதவி பதிவாளர் (ஓய்வு), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**N. பிரேமலதா**


NAPA VALLEY BY DAC

DAC
DREAM ASCEND CONQUER

# LOCATED NEAR OMR AT HALF THE PRICE OF OMR

( 5 Kms from Sathyabama University | 4 Kms from Perumbakkam Metro )



OMR Market Price
~~₹1.10 Cr.~~

2&3 BHK Apts.
From ₹ 64L

Scan For Location

## Location Advantages

**METRO STATIONS**
- Sathyabama University Metro - **5 Kms**
- Perumbakkam Metro - **4 Kms**

**IT PARKS**
- ELCOT SEZ - **7.4 Kms**
- SIPCOT IT Park - **9 Kms**

**HOSPITALS**
- H & M Hospital - **3.7 Kms**
- Gleneagles Global Health City - **6.9 Kms**

**SCHOOLS**
- BVM Global School - **2.1 Kms**
- Orchids The International School - **3 Kms**

**COLLEGES**
- Sathyabama University - **5 Kms**
- Prince Shri Venkateshwara Engineering College - **5.4 Kms**

**ENTERTAINMENT ZONE**
- Vivira Mall - **6.2 Kms**
- AGS Navalur - **6.2 Kms**

**TRANSPORTATION**
- Arasankazhani Bus Stop - **1.5 Kms**
- Perumbakkam Bus Depot - **4.1 Kms**

## Why Choose Napa Valley?

- Premium Gated Community
- Private Terrace Apartments
- 100% Vaastu Compliant Homes
- Total Privacy Ensured with Main Doors Not Facing Each Other
- Lifestyle Amenities Including Air Conditioned GYM, Indoor Games, Multipurpose Hall, Yoga/Meditation, Roof Top Amenities and More
- Power Backup Inside the Apartments
- Independent Lift Lobby for Each Block
- Ample Car Park Space at Stilt Level

110+ PROJECTS | 3.5M+ SQFT CONSTRUCTION | 3000+ HAPPY FAMILIES

TN/35/BUILDING/0166/2025
DATED 02.05.2025
www.rera.tn.gov.in

93003 93003
www.dacdevelopers.com

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

**குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

**சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.**

**சிறப்பம்சங்கள் :**

- தனி நபர் கட்டணம் ரூ. 200/- மட்டும்
- Locker Facility உள்ளது.
- காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
89731 63434

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
98403 17346

## இதழின் உள்ளே....




சங்க நிகழ்வுகள் ........ 11 – 16

மணமகன் / மணமகள் தேவை........ 22–24

இந்திய அரசியல் சாஸனம் ........33

சங்கப் பலகை........37

சிறுவர் பகுதி........43–46



**கார்காத்தார் ஒப்புரவு**

**கார்காத்தார் சங்கம் (சென்னை)**

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**

**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533



கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு “கார்காத்தார் ஒப்புரவு” நிர்வாகம் பொறுப்பேற்காது.


## ஏடு இட்டோர் இயல்



எம் கார்குலச் சொந்தங்களுக்கு கார்காத்தார் ஒப்புரவின் வணக்கங்களும், வாழ்த்துக்களும்!

இவ்வாண்டு ஆடிப்பெருக்கிற்கு முன்பே மேட்டூர் அணை நான்கு முறை நிரம்பி, நம் தமிழக விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது. ஆடிப் பதினெட்டுக்கும் காவரித்தாய் கரைபுரண்டு ஓடுகிறாள். கரை புரண்டு ஓடும் ஆற்றினைப் பார்க்கவே மனம் குதூகலிக்கிறது!

உள் நாட்டிலேயே எடை குறைவான, விலை மலிவான சக்கர நாற்காலியை ஒய்.டி.ஒன் ஆய்வுக் குழுவும், சென்னை ஐ.ஐ.டி யும் இணைந்து உருவாக்கி உள்ளனர். இதன் எடை 9 கிலோ மட்டுமே. எடை குறைவாக இருப்பினும் கடினத்தன்மை உள்ளதால் பள்ளம் மேடுகளில் ஏறி இறங்கும் போது சேதமடையாது என்றும், இதன் விலை ரூ. 74,700 என்றும் கூறியுள்ளனர். மாற்றுத் திறனாளிகளுக்கு இது நிச்சயம் பயனளிக்கும் ஒரு கண்டு பிடிப்பே!

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா சர்வதேச விண்வெளி நிலையத்தில் 18 நாட்கள் தங்கி ஆய்வு மேற்கொண்ட பின் வெற்றிகரமாக ஜூலை 15–ஆம் தேதி பூமிக்குத் திரும்பியுள்ளார். அவருக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இந்திய கடற்கடைக்காக உள்நாட்டில் தயார்க்கப்பட்ட ‘ஐ.என்.எஸ் அஜய்’ போர்க்கப்பல் ஜூலை 21 ஆம் தேதி கொல்கட்டாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஜெர்மனியில் நடந்த 32–வது உலகப்பல்கலை விளையாட்டுப் போட்டியில், ஆண்கள் 50 மீ நீச்சலில், இலக்கை 24 வினாடியில் கடந்து தேசிய சாதனைப் படைத்துள்ளார். தமிழகத்தைச் சேர்ந்த ரோகித் பெனடிக்சன், ஆசிய ரோலர் ஸ்கேட்டிங்கில் சாம்பியன் ஷிப்பில் ஷ்ரேயாசி ஜோஷி தங்கள் வென்ற முதல் இந்தியரானார். பூனாவைச் சேர்ந்த இவர், தனது மூன்றாவது வயதில் ஸ்கேட்டிங் விளையாடத் தொடங்கி உள்ளார்.

மேலும் ஹங்கேரியில் நடைபெறும் சர்வதேச மல்யுத்த தொடரில் 72 கிலோ பிரிவில் இந்தியாவின்

ஹர்ஷிதா நான்கு முறை ஆசிய சாம்பியன் ஆன கஜகஸ்தானின் ஜமிலியாவை வென்று தங்கப்பதக்கம் வென்றார். 53 கிலோ பிரிவு இந்தியாவின் 20 வயது வீராங்கனை அன்டிம்பங்கல் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். வெற்றி பெற்ற அனைவரையும் கார்காத்தார் ஒப்புரவும், கார்குல மக்களும் வாழ்த்துகிறோம்.

உலக கோப்பை செஸ் அரை இறுதிக்கு இந்தியாவின் திவ்யா தகுதி பெற்றுள்ளார். அவர் வெற்றிக் கோப்பையை வெல்ல நாம் வாழ்த்துவோம்!

* நமது தமிழக முதல்வர் உடல் நலமின்றி சிகிச்சையில் உள்ளார். அவர் நன்கு உடல் நலம் தேறி, தனது பணிகளைச் செவ்வனே செய்ய இறைவனைப் பிரார்த்திப்போம் !

நன்றி ! வணக்கம் !

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.

❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்

**தொகை செலுத்தியபின்** Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு,**
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

- கார்காத்தார் ஒப்புரவு

# சங்க நிகழ்வுகள்

## சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### நங்கநல்லூர் :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் சங்க தலைவர் தலைமையில் அவரது வரவேற்பு மற்றும் மலர்ச்சி இறைவணக்கப் பாடலுடன் சங்க கட்டிட வளாகத்தில் 27–7–25 அன்று நடைபெற்றது.

இரங்கல் நிகழ்வாக சங்க ஆலோசகர் திரு. T. இராஜசேகரன் அவர்களது தாயார் திருமதி. மணிமேகலை அம்மாள் மற்றும் சங்க செயற்குழு உறுப்பினர் திரு. S. கல்யாணசுந்தரம் அவர்களது சகோதரர் திரு. S. சுவாமிநாதன் மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சென்ற மாதத்திய கூட்ட அறிக்கையை தொடர்ந்து சங்கத்தின் பிற நிகழ்வுகளும் சங்க செயலாளர் திரு. G. தியாகராஜன் அவர்களால் விவரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

சங்க பொருளாளர் திரு. V. செல்வகுமார் சமர்ப்பித்த வரவு செலவு கையிருப்பு விவரத்தினை குழு ஏற்றுக்கொண்டது.

சதாபிஷேக தம்பதியர் சங்க துணைத்தலைவர் திரு. G. சுவாமிநாதன் – வசந்தா அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு முதல் நங்கநல்லூர் வட்டாரத்தை சார்ந்த சங்க உறுப்பினர்களது மணிவிழா மற்றும் சதாபிஷேக விழா கண்ட தம்பதிகளுக்கு ஆண்டு விழாவின் போது சங்க பொறுப்பில் சிறப்பு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

கும்பகோணத்தில் நடைபெறவிருக்கும் ''கார்குல கலாச்சார சங்கமம் – கார்குல திருநாள்'' விழா சிறப்பாக நடைபெற வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் திரு. S.M. சொர்ணமூர்த்தி அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு சமூக ஆர்வலர் திருமதி. நிரஞ்சனா கணேஷ் அவர்களால் இனிப்புடன் கூடிய சுவையான உணவு வழங்கப்பட்டது.

### அண்ணாநகர் :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 20.07.2025 அன்று ஆடிட்டர் K. முத்தையா அவர்களது ஆபிஸில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைவர் J. கோபாலகிருஷ்ணன் தலைமைதாங்கி நடத்தினார்.

சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் திரு. K. முத்தையா அவர்களின் மாமனார் திரு. R. நெல்லை நாயகம், (தலைமை ஆசிரியர் ஓய்வு) அவர்கள் 13.07.2025 அன்று இயற்கை எய்தினார்கள். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இரண்டு நிமிடம் ''மௌன அஞ்சலி'' செலுத்தப்பட்டது.

அண்ணாநகர் சங்கத்தின் பொதுக்குழு 05.10.2025 நடைபெறவுள்ளதையொட்டி, எந்த கல்யாண மண்டபத்தில் நடத்துவது, மற்றும் யாரை சிறப்பு விருந்தினராக அழைப்பது, மேலும் வருகிறவர்களுக்கு என்ன 'பரிசு'' கொடுப்பது என்று விவாதிக்கப்பட்டது. இந்த ஆண்டு விழாவிற்கு ''ஆண்டு விழா மலர்'' போடுவது என தீர்மானிக்கப்பட்டது.

அண்ணாநகர் அமுத சுரபி அறக்கட்டளை சார்பில் இந்த வருடத்திற்கான கல்வி நிதி 13 மாணவ / மாணவியர்க்கு சுள. 65,000/– வழங்கப்பட்டது என அறக்கட்டளை அறங்காவலர் தெரிவித்தார்.

துணைத்தலைவர் திரு. ஏ. இராஜசேகரன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

J. கோபாலகிருஷ்ணன்,

தலைவர்.

**போரூர்**

போரூர் சங்க செயற்குழு கூட்டம் 17–7–25 அன்று கௌரவத்தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அவ்வமயம் நிறைவேற்றப்பட்ட

**தீர்மானங்கள் :**

சங்க பத்தாம் ஆண்டு விழா செப்டம்பர் 21- or 28-ம் தேதி சிறப்பாக நடத்துவது எனவும்,

பத்தாம் ஆண்டு மலர், உறுப்பினர்களின் முழு முகவரியுடன் கலர் புத்தகமாக ஒரு பக்கத்துக்கு விளம்பரம் ரூபாய் மூவாயிரம் எனவும் வெளியிடுவது எனவும்,

மறைந்த செயற்குழு உறுப்பினர்கள் திரு. சிதம்பரம், திரு. சங்கரன், திரு. விஜயகோபால் அவர்கள் புகைப்படம், மலரில் வெளியிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கொடை வள்ளல் திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களின் எண்பதாம் ஆண்டு விழாவில் போரூர் சங்கம் கலந்துகொண்டு தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்து ஆசீர்வாதம் பெற்றது என்பதையும்

மாங்காடு ஆதிவ் மருத்துவமனை திறப்பு விழாவில் தலைவர் இராமலிங்கம், செயலாளர் சந்திரமோகன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கண்ணன், உமாசங்கர் ஆகியோர் கலந்து கொண்டு, சால்வை அணிவித்து கௌரவித்தது என்பதை சங்கம் தெரிவித்துக்கொள்கிறது.

திரு. கல்யாணசுந்தரம் தொடங்கியுள்ள “CREAM & CRUMBS” சிறப்பாக செயல்பட வாழ்த்தி, அவர்கள் அளித்த சொந்த தயாரிப்பான மாலை விருந்தான ICE CREAM, CAKE, SWEET, DRINKS-டன் திரு. ராஜா அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

S. சந்திரமோகன்,
செயலாளர்.

**கடலூர் :**

சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் 02–06–2025 அன்று சங்கத்தின் கட்டிடக்குழுத்தலைவர் திரு. Er. S. பிறையோன் தலைமையில் அவரது S.P. டவர்ஸ் கட்டிடத்தில் நடைபெற்றது. சங்க செயலாளர் B. சிவமணி அனைவரையும் வரவேற்றார்.

சங்கத்தின் உறுப்பினர்களின் முகவரியுடன் கூடிய குடும்ப விவரங்கள் அடங்கிய புத்தகம் அச்சிட்டு வழங்கிட ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொருளாளர் திரு. G. பாலமுருகன் 2022 – 23 ; 2023 – 24 மற்றும் 2024 – 25 மார்ச் முடிய உள்ள காலங்களின் வரவு செலவுகள் சுருக்க அறிக்கையினை செயற்குழுவில் அளித்தார்கள்.

கடலூர் சங்கத்தின் 44–ம் ஆண்டு விழா எதிர்வரும் 10–8–2025 ஞாயிறு அன்று சங்கக் கட்டிடத்தில் முற்பகல் 9.00 மணி முதல் துவங்கி நடத்திடவும், 11.00 மணியளவில் தேநீர் வழங்கிடவும், மதிய உணவும் பொதுக்குழுவில் கலந்து கொள்பவர்களுக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

முகவரி அச்சிட்ட புத்தகம் ஆண்டு விழாவில் வழங்குவதென முடிவு செய்யப்பட்டது. ஆண்டு விழா மற்றும் புத்தக வெளியீட்டிற்கான நிதியை சங்க நிதியிலிருந்து செலவிட ஒப்புதல் அளிக்கப்பட்டது.

திரு. S. சிவகுருநாதன் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்ததுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

- T. விவேகானந்தன்,
தலைவர்.

**குமராட்சி ஒன்றியம்:**

சங்க செயற்குழு கூட்டம் ஒன்றிய மண்டபத்தில் 27.07.2025 அன்று தலைவர் திரு. G. சிவராமன் பிள்ளை தலைமையில் கூடியது. செயலாளர் திரு. S. இராமச்சந்திரன் பிள்ளை வரவேற்பிற்கு பிறகு, பொருளாளர் திருமதி. R. திலகம் அம்மையாரால் ஆண்டு விழாவின் வரவு செலவு வாசிக்கப்பட்டு குழுவால் ஏற்கப்பட்டது.

தொடர்ந்து கடந்த மாதம் நடைபெற்ற ஆண்டு விழா பற்றிய குறை நிறைகள் விவாதிக்கப்பட்டது. 2026ஆம் ஆண்டு முதல் நம் பகுதியில் பள்ளிக் கல்வி பயிலும், பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவ, மாணவிகளுக்கும், சுய தொழிற் புரிய, மகளிர்களுக்கும் நிதியுதவி அளிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

20.07.2025 அன்று சிதம்பரத்தில் நடந்த மாநில சங்க கூட்டமைப்பு பின் கேட்புக்கு இணங்க எங்கள் முடிவாக நம்மின மக்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க முயல வேண்டாம் என்றும்,

விடுபட்டுள்ள சாதியினருக்கு பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கு 10% வெளி ஒதுக்கீட்டை (Economically Weaker Section) தமிழக அரசும் நம் மக்களுக்கு வழங்க கோருதலே சிறப்பாக இருக்கும் என தீர்மானிக்கப்பட்டது.

நன்றி நவிலலுக்கு பின்பு கூட்டம் இனிது முடிவுற்றது.

– S. இராமச்சந்திரன்
செயலாளர்
**94864 55841**

**சீர்காழி :**

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 06–07–25 அன்று தலைவர் திரு. K. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதிய உறுப்பினராக திரு. ம. ரமேஷ் சட்டநாதபுரம் சேர்க்கப்பட்டார்.

2025–ம் ஆண்டிற்கான கல்வி உதவிதொகை கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

பொருளாளர் திரு. ரவிச்சந்திரன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

20–7–25 அன்று சிதம்பரத்தில் நடந்து மாநில கார்காத்தார் கூட்டமைப்பின் பொதுக்குழு கூட்டத்தில் சீர்காழி சங்கத்தின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

– சி. அகோரம்,
செயலாளர்.

**மணிக்கிராமம் :**

சங்க கூட்டம் 8–7–25 அன்று சிவன் கோவிலில் பிரதோஷ வழிபாட்டுக்கு பிறகு தலைவர் திரு. G. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. சங்க கௌரவ தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்க செயலர் திரு. T. கபிலன் அறிக்கை வாசிக்க, பொருளர் திரு. S. பரமநாதன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது.

ஆகஸ்டு மாதத்தில் சங்க ஆண்டு விழா நடத்துவது சம்பந்தமாக விவாதிக்கப்பட்டது. சங்கத்தின் மூலம் கல்வி உதவிதொகை வாங்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் சங்க கூட்டத்தில் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்பட்டது. 80–வது பிறந்த நாள் காணும் கார்குல வள்ளல், ஏழையின் பங்காளன் அகவை எண்பது காணும் திரு. வெங்கடேசன் பிள்ளை – திருமதி. ஞானாம்பிகை தம்பதியினரை வணங்கி மகிழ்கிறோம். ஆகஸ்டு 10–ம் தேதிகும்பகோணத்தில்நடைபெறும்கார்குலமகளிரின் கலாச்சார விழாவில் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இறுதியாக V. ஜெயக்குமார் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

– கோ. கபிலன்,
தலைவர்.

**இளந்தோப்பு :**

25–06–25 அன்று சங்க கூட்டம் திரு. S. சபாநாயகம் பிள்ளை அவர்கள் தலைமையிலும், திரு. S.S.R. பிள்ளை, அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

10–6–25 அன்று ஸ்ரீ விநாயகர் ஆலய வருஷாந்தி (7–ம் ஆண்டு) சிறப்பாக நடைபெற்றது.

6–6–25 அன்று நமது சங்க உறுப்பினர் திரு. G. சேக்கிழார் பிள்ளை மகன் S. சிவா (எ) பரத்குமார் மற்றும் திரு. E. இளஞ்செழியன் பிள்ளை மகள் E. கௌரி மற்றும் நமது சங்க உறுப்பினர் M. பாலசுப்பிரமணியன் அவர்கள் மகன் B. மாணிக்கம், S. முத்து பிள்ளை மகள் M. ஆர்த்தி இவர்களது திருமணம் 8–6–25 அன்றும் இனிதே நடைபெற்றது. இவர்களது இருவரது திருமண விழாவிற்கும் வாழ்த்து மடல் மற்றும் சால்வை அணிவிக்கப்பட்டது.

ஆடி மாதம் 8–8–25 அன்று ஸ்ரீ வாழமுடை அய்யனார் ஆலயத்திற்கு குதிரை விடுவதற்கு முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்திற்கு வந்த அனைவருக்கும் திரு. K. குருநாதன் பிள்ளை அவர்கள் நன்றி தெரிவித்தார்கள் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

V. ராமநாதன்,
தலைவர்

**செம்பனார் கோவில் :**

சங்க கூட்டம் 06–07–2025 அன்று சங்க தலைவர் M.C. இராமநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் குமரன் வடக்கு வீதி திரு. இராமதாஸ்

ஆசிரியர் அவர்கள் இல்லத்தில் செல்வி. K. மதுமித்ரா இறைவணக்கம் பாடிட, R. கார்த்திகேயன் அவர்கள் வரவேற்பு ஆற்றிட, வரவு செலவு மற்றும் சென்ற மாத கூட்டறிக்கையை சங்க பொருளர் M.C. செல்வராஜ் அவர்கள் வாசித்திட கூட்டம் இனிதே தொடங்கியது. சங்க தலைவர் அவர்கள் பேசுகையில் அரசு போக்குவரத்து கழக ஓட்டுனர் திரு. பாலசுப்ரமணியன் அவர்களின் பணிநிறைவு பாராட்டு விழா மற்றும் கார்குல கொடை "வள்ளல்" திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களின் "சதாபிஷேக" விழா பற்றியும் பேசினார்கள். **15–08–2025** அன்று திருச்சியில் மங்கல சந்திப்பு நடைபெறவுள்ளது என்றும், கும்பகோணத்தில் **10–08–2025** அன்று மகளிர் கலாச்சார விழா நடைபெறவுள்ளது பற்றி பேசினார்கள்.

சங்க உறுப்பினர் A.M. சேகர் அவர்கள் திருக்குறள் பற்றியும், இதிகாச கதைகள், இராமன் சீதை, பாண்டிய மன்னன் பற்றி பல அறிய கருத்துகளை கூறினார்கள். நமது சங்க "நகைச்சுவை மன்னன்" திரு. மதியழகன் எப்பொழுதும் போல் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள்.

திரு. வாசன் அவர்கள், "சிவ சிவ" என்பது பற்றியும் நெற்றியில் "திருநீறு" பூசுவது பற்றியும் நமது எண்ணங்கள் தான் நமது அடுத்த தலைமுறைக்கு இருக்கும் என்றும் கூறினார்கள்.

மேலும் திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்கள் பேசுகையில் கூட்டம் நடத்திய இல்லத்தாரின் சிறப்புகளை கூறி பாராட்டுகளை தெரிவித்து கொண்டார்கள். காலை / இரவு இரண்டு வேளையும் கடவுளை வணங்கினால் அனைத்தும் சுபமாக அமையும் என்றும் கூறினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த உறுப்பினர்களுக்கு கூட்டம் நடத்திய இல்லத்தாரால் ஆண்களுக்கான பரிசு திரு. இரவிச்சந்திரன் அவர்களுக்கும், பெண்களுக்கான பரிசு திருமதி. கிருஷ்ணவேணி அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தாரால் அனைவருக்கும் இரவு விருந்து வழங்கி உபசரிக்கப்பட்டது.

திரு. இராமதாஸ் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

**பரசலூர் :**

**06–7–25** அன்று சங்க கூட்டம் நக்கீரர் தெரு R. அமிர்தகணேசன் – ஜெயசுதா இல்லத்தில் அவர்களது **19–ம்** ஆண்டு திருமண நாளை முன்னிட்டு A. ஜெயசுதா இறைவணக்கம் பாட R. அமிர்தகணேசன் வரவேற்புரை நிகழ்த்த தலைவர் K. கோவிந்தராஜன் தலைமையில் கூட்டம் துவங்கியது.

சென்றமாத அறிக்கையைசெயலரும்,மாதநிதிய அறிக்கையை பொருளரும், மு.அ. நிதிய அறிக்கையை தலைவரும் வாசிக்க, நிதிய சம்மந்தமான பதிவேடுகள் அனைத்தும் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க வளர்ச்சிக்கு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை எடுத்து கூறினார்கள்.

R. அமிர்தகணேசன் – ஜெயசுதா இல்லத்தில் நடைபெற்ற திருமண நாள் கூட்டத்தில் மணமக்களை சங்க பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் வாழ்த்தி பேசினார்கள். உறுப்பினர் செந்தில்குமார் வாழ்த்தி கவிதை மழை பொழிந்தார்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட 40 பேருக்கும் இனிப்புடன் இரவு உணவு வழங்கப்பட்டது. சங்க பொறுப்பாளர்களுக்கு இல்லத்தார் சார்பில் சால்வை அணியப்பட்டது. சங்கத்தின் சார்பில் சு. அமிர்தகணேசன் – ஜெயசுதா தம்பதியினருக்கு N. சிவக்குமார், N. சித்ரா சால்வை அணிவித்தனர்.

**30–6–2025** கூட்டுறவு துறையில் பணியாற்றி பணி ஓய்வு பெற்ற M. சாமிநாதன் அவர்களுக்கு அவர் இல்லத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் சங்க பொறுப்பாளர்கள், மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பாராட்டியும், பரிசு பொருட்கள், சால்வையும் வழங்கினார்கள்.இல்லத்தார்சார்பில்இரவுஇனிப்புடன், உணவு வழங்கப்பட்டது நிகழ்ச்சியினை மனைவி ரேணுகாதேவி, மகள், மருமகன் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

சிறப்பு குலுக்கலுக்கான ஆண்களுக்கான பரிசு E. ராமலிங்கம், பெண்களுக்கான பரிசு தையல்நாயகிக்கும் முறையே அமிர்தகணேசன் ஜெயசுதா வழங்கினார்கள்.

பேராசிரியர் திரு. V. சிவக்குமார் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன்,

செயலர்.

Cell : 9894960438

## மேலப்பெரும்பள்ளம் :

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு: சங்க கூட்டம் 02–07–25 அன்று சங்க மூத்த உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன் (ஆசிரியர் – ஓய்வு) அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது.

சங்க உறுப்பினர்களை தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் வரவேற்று பேசினார். 2025 – 2026 –ஆம் கல்வி ஆண்டிற்கு "மனிதநேய அறக்கட்டளை" சென்னை மூலம் கல்வி உதவித்தொகை பெற உரிய விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து சங்கத்தால் பரிந்துரை செய்து அனுப்பிட ஒப்புதல் பெறப்பட்டது.

பின்னர் பொருளாளர் திரு. G. பாஸ்கரன் அவர்கள் நன்றி நவில சங்க கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- B. இலட்சுமணன், தலைவர்.

Cell : 9443783743

## 80. இராதாநல்லூர் :

சங்க கூட்டம் 13–7–2025 அன்று சங்க செயலர் திரு. அ. ராஜா முத்தையா அவர்கள் இல்லத்தில் தலைவர் அவர்கள் தலைமை வகிக்க சிறப்பு விருந்தினராக சீர்காழி மண்டல துணைத்தலைவர் திரு. M. சிங்காரவேலன் அவர்கள் முன்னிலை வகிக்க சங்க பொருளாளர் M. சீனிவாசன் அவர்கள் வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஜூலை மாதத்தில் பிறந்த நாள் மற்றும் திருமணநாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

நமது சங்க செயற்குழு உறுப்பினர் திரு. அ. சண்முகநாதன் – மகளிர் அணி திருமதி. பா. ஜெயஸ்ரீ ஆகியோரின் புதல்வி செல்வி. ச. ஸ்ரீ உமாபார்வதி, 10–ம் வகுப்பு பொதுத் தேர்வில் 500 க்கு 495 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதலிடமும் மாவட்ட அளவில் 2–ம் இடமும் பெற்றமைக்கு மகளிர் அணி திருமதி. P. கலைச்செல்வி அவர்கள் சால்வை அணிவிக்க சங்க தலைவரும், சிறப்பு விருந்தினர் சீர்காழி மண்டல துணைத்தலைவர் திரு. M. சிங்காரவேலன் ஆகியோர் இணைந்து நினைவுப்பரிசினை வழங்கினர். சிறப்பு விருந்தினர் உரையில் குறிக்கோளுடன் மேற்படிப்பை தொடர வேண்டும் எனவும் வாழ்த்தி உரையாற்றினார்கள்.

திருவெண்காடு தெற்கு வீதியில் வசித்து வரும் திரு. E.S. சுப்ரமணியன் அவர்களை புதிய உறுப்பினராக மண்டல துணைத்தலைவர் முன்மொழிய செயலர் வழிமொழிய சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

சங்க செயற்குழு உறுப்பினர் திரு. அ. சண்முகநாதன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- T. முத்துக்குமரசாமி,

தலைவர்.

9443645646

## பூம்புகார் - மேலையூர்

சங்க கூட்டம் (13–7–2025) அன்று உறுப்பினர் திரு. பரணிதரன் இல்லத்தில் இனிதே நடைபெற்றது. சங்க உறுப்பினர்களை தலைவர் திரு. N. பாண்டியன் அவர்கள் வரவேற்றுப் பேசினார். CREW அறக்கட்டளை மூலம் கல்வி உதவிதொகை பெற தகுதியுள்ள மாணவர்கள் விண்ணப்பங்களை அனுப்ப கேட்டுகொள்ளபட்டது. மகளிர் அணி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகபடுத்தி மாத ஆலோசனை கூட்டத்திற்கு அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. தேனீர் விருந்துடன் சங்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- G. விஜயராகவன்,

செயலாளர்.

Cell : 9994635306

## நெடுங்காடு :

திரு. மு. வேணுகோபால் பிள்ளை அவர்கள் இல்லத்தில் இறைவணக்கம் திரு. K.S. கணபதி சுப்பரமணியன் பாட சங்க கூட்டம் இந்த மாதம் தலைவர், செயலாளர், பொருளாளர், மண்டல செயலாளர் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. திரு. வேணுகோபால் பிள்ளை அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கும்பகோணத்தில் நடைபெற்ற மகளிர் சங்க ஆலோசனை கூட்டத்திற்கு சங்க நிதியில் இருந்து ரூ. 10,000/– கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

நெடுங்குளம் R. பாண்டியன் அவர்கள் ரூ. 500/–, நெடுங்குளம் V. ராஜ்குமார் அவர்கள் ரூ. 1000/–, சங்கத்திற்குநன்கொடை அளித்தார்கள். அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

கும்பகோணம் கலாச்சார சங்கமம் விழாவிற்கு நமது சங்க மகளிர் முன்னோடியாக செயல்பட்டு வரும் திரு. செல்வி. அல்லி அவர்களின் பெயரை பரிந்துரை செய்ய முடிவு செய்யப்பட்டது.

CREW கல்விநிதி உதவி பெற விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டது. 13 நபர்களுக்கு அளிக்கப்பட்டது.

இந்த மாத பரிசு குலுக்கல் : I - S. செந்தில் – வரிச்சிக்குடி. II. - R. பாண்டியன் – நெடுங்குளம். III - குமார் (எ) ராஜமாணிக்கம் – நெடுங்குளம்.

– திரு. S. ரெங்கநாதன்,

செயலாளர்.

## குத்தாலம்:

சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் 27.07.2025 அன்று குத்தாலம் அருணகிரிநாதர் தெரு M. ராமச்சந்திரன் பிள்ளை நினைவரங்கில் பள்ளி மாணவிகளின் தேசிய கீதத்துடன் தொடங்கியது. இக்கூட்டத்தின் தலைவர் R. சுவாமிநாதன் தலைமையிலும், செயலாளர் M. கண்ணன், R. பாலசுப்ரமணியன், K. சங்கரன் முன்னிலை வகித்தனர். J. வேதநாயகம் பிள்ளை அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். ஆசிரியர் வெ. சடையப்பன், R. துரை, S. கிருஷ்ணமூர்த்தி கருத்துரை வழங்கினர். சங்க பொருளாளர் LN. M.R. பலராமன் 01.01.2024 to 31.12.2024 வரை உள்ள வரவு, செலவுகள் வாசித்தார். தொடர்ந்து மாநில துணைத்தலைவர் S. சண்முகம் பிள்ளை அவர்களும், மண்டல செயலாளர் S. சீனிவாசன் பிள்ளை அவர்களும் கருத்துரை வழங்கினர். அதனை தொடர்ந்து சிறப்பு விருந்தினர் தருமையாதீன புலவர் முனைவர் இரா. செல்வநாயகம் M.A., M.L., IS, M.Phil., Ph.D. அவர்கள் சிறப்புரை வழங்கினார். அதனை தொடர்ந்து 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற 8 மாணவர்களுக்கு சால்வை அணிவித்து நினைவு பரிசும், புத்தகமும் வழங்கப்பட்டன. நினைவு பரிசை J. வேதநாயகம் அவர்களும், பேராசிரியர் G. மணிகண்டன் புத்தகமும் வழங்கினார்கள். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினரின் நண்பர் காஞ்சிவாய் G. ஆனந்தன் பிள்ளை அவர்கள் கலந்துகொண்டார். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அகவை 80 கண்ட, கார்குல மாணாக்களின் கல்வி கொடைவள்ளல் ஐயா ச. வெங்கடேசன் பிள்ளை – திருமதி ஞானாம்பிகை தம்பதியினரை வணங்கி, வாழ்த்தி சங்கத்தின் சார்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

10.08.2025 அன்று குடந்தையில் நடைபெறும் கார்குல கலாச்சார சங்கம நிகழ்ச்சியில் குத்தாலம் சார்பாக அனைத்து மகளிர்கள் குடும்பத்தோடு கலந்துகொள்வது என்றும், அவ்விழாவிற்கு ரூ. 10,000/– நன்கொடை வழங்குவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இறுதியாக மகளிர் அணி தலைவி T. பர்வதம் தமிழ்ச்செல்வன் நன்றியுரை வழங்கினார். இரவு விருந்துடன் கூட்டம் இனிதே நடைபெற்றது.

- LIC. R. சுவாமிநாதன்

தலைவர்

## மதுரை :

13–7–2025 அன்று செயற்குழு கூட்டம் நடைபெற்றது.சங்க தலைவர் முனைவர். K. சிவசுப்ரமணியம் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மதிப்புறு ஆலோசகர் இரா. கணேசன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார். மாநில துணை தலைவர் S. உமையொருபாகம் மகளிர் அணி செயலாளர் M.R. ஜான்ஸிராணி, துணை செயலாளர். N. இராமலிங்கம், S. சுந்தரராஜன், C. கார்த்திகேயன் செயற்குழு உறுப்பினர், C. பசுங்கிளி மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் கல்வி உதவித்தொகை சம்பந்தமான படிவங்கள் வழங்கப்பட்டன. நமது மாநில சங்க சிறப்பு பொதுக்குழு 20–7–2025 சிதம்பரம் அழைப்பிதழ் சம்மந்தமாக சங்கத்தில் பேசப்பட்டு பொதுக்குழு கலந்து கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சங்க செயலாளர் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- B. ரவிச்சந்திரன், செயலாளர்.

9443831474

# ஆ. சண்முக வேலாயுதன்

ஆ. சண்முக வேலாயுதன் ஒரு சுயமாக ஊக்குவிக்கப்பட்ட தொழில் முனைவோர் ஆவார். இவர் 1967–ஆம் ஆண்டு ராஜபாளையத்தில் உள்ள பி.ஏ.சி. ராமசாமி ராஜா பாலிடெக்னிக்கில் இயந்திர பொறியியலில் டிப்ளமோ முடித்தார்.

பின்னர் அவர் 1967 முதல் 1970 வரை கோயம்புத்தூரில் உள்ள பி.எஸ்.ஜி. இண்டஸ்ட்ரீஸில் மூன்று ஆண்டுகள் பணியாற்றினார். மேலும் 1970 முதல் 1973 வரை சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள பின்னி பொறியியல் பிரிவில் பணியாற்றினார்.

1974–ஆம் ஆண்டு, வாடகை திட்டத்தின் கீழ் கிண்டியில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டையில் ஒரு சிறுதொழில் ஒன்றைத் தொடங்கினார். அவருக்கு நிதிப் பின்புலம் இல்லாததால், அவர் கடுமையாகப் போராடி, மிகுந்த சிரமத்துடன் தனது தொழிலை சிறு மற்றும் நடுத்தரத் தொழிலாக வளர்த்து, தற்போது டிரான்ஸ்பார்மர் 50MVA வரையிலான மின்மாற்றிகள், (110KV வகுப்பு) மற்றும் 420KV வரையிலான ஐசோலேட்டர்கள் மற்றும் மின் பெட்டிகளை (ஜீன் முல்லர் ஒத்துழைப்புடன்) உற்பத்தி செய்கிறார்.

எந்தவொரு நிதிப் பின்புலமும் வெளிப்புற ஆதரவும் இல்லாமல், அவர் இந்த உயரத்தை அடைந்தார் மேலும் பல்வேறு பெருநிறுவனங்களுக்கு மின் பயன்பாடுகள், சூரிய மற்றும் காற்றாலை ஆகியவற்றின் மின் உற்பத்தி உருவாக்குநர்கள் போன்றவர்களுக்கு மின்மாற்றிகளை வழங்கி வருகின்றார்.

மேலும், இந்த நிறுவனம் இந்தியா முழுவதும் தரமான ஐசோலேட்டர்கள் வழங்கி வருகிறது.

அவர் கிண்டி, திருமுடிவாக்கம் மற்றும் காக்களூரில் தொழிற்கூடங்கள் வைத்துள்ளார். சுமார் 200 தொழிலாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு அளித்து வருகிறார்.

**பிற செயல்பாடுகள் :**

தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட இவர், 40 ஆண்டுகளுக்கும் மேலாக கலைஞர் கருணாநிதி நகர் இலக்கிய வட்டத்தில் முக்கிய பங்கு வகித்து வருகிறார்.

அவர் நண்பர்களுடன் சேர்ந்து பாக்கியலட்சுமி பெனிஃபிட் ஃபண்ட் என்ற நிதியைத் தொடங்கினார். அது 37 ஆண்டுகளுக்கும் மேலாக மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது. அவரது திறமையான வழிகாட்டுதலின் கீழ் பங்குதாரர்களுக்கு போனஸ் பங்குகளை அறிவித்த ஒரே நிதிலிமிடெட் இதுவே ஆகும்.

இப்போது அவர் MSME தொடர்பான பல்வேறு துறைசார்ந்த சங்கங்களில் ஆலோசகராக உள்ளார்.

யார் வேண்டுமானாலும் வெற்றிகரமான தொழில்முனைவோராக முடியும் என்பதற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழும் திரு. ஆ. சண்முக வேலாயுதனை கௌரவிப்பதில் டான்ஸ்டியா பெருமை கொள்கிறது. அதற்கு விருப்பமும் கடின உழைப்பும் தேவை.

உலகளவில் MSME தினம் என்று ஆண்டுதோறும் ஜுன் 27–ஆம் தேதி கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழ் நாட்டில் டான்ஸ்டியா தலைமையில் MSME தினம் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த வருடம் நடைபெற்ற MSME தினத்தில் முதல் முறையாக வாழ்நாள் சாதனையாளர் என்ற வகையில் கோவையைச் சேர்ந்த ஏ.வி. வரதராஜன் அவர்களையும், சென்னையில் ஆ. சண்முக வேலாயுதன் அவர்களையும் தேர்ந்தெடுத்து கௌரவித்துள்ளன.

ஆ. சண்முக வேலாயுதன் அவர்கள் மேலும் பல விருதுகள் வாங்கி கார்குலத்திற்கு பெருமை சேர்த்திட மனமார்ந்த நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்து கொள்கிறோம்.

# வாழ்த்துகிறோம்







**2025ஆம் ஆண்டுக்கான சிறு குறு நடுத்தர தொழில் முனைவோர் MSME தினம்** டான்ஸ்டியா கொண்டாடியது. அன்று **வாழ்நாள் சாதனையாளர் விருது** நமது கார்குல உறவினர் திரு. **ஆ. சண்முகவேலாயுதன்** அவர்கள் முதன் முறையாக வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்று கார்குலத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள். அவர்கள் மேலும் பல விருதுகள் வாங்கி கார்குலத்திற்கு மென்மேலும் பெருமை சேர்த்திட மனமார்ந்த நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## "கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரங்கள்

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. | 300/– |
| ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்) | ரூ. | 2000/– |
| கலர் (¼) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்) | ரூ. | 1500/– |
| கலர் (½) அரைப்பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்) | ரூ. | 3000/– |
| மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு) | ரூ. | 500/– |
| கருப்பு வெள்ளை (¼) கால் பக்கம் | ரூ. | 750/– |
| கருப்பு வெள்ளை (½) அரைப்பக்கம் | ரூ. | 1500/– |
| கருப்பு வெள்ளை முழுப்பக்கம் | ரூ. | 3000/– |
| கலர் முழு பக்கம் | ரூ. | 7000/– |
| முன் அட்டை உட்புறம் | ரூ. | 8000/– |
| பின் அட்டை உட்புறம் | ரூ. | 8000/– |
| பின் அட்டை வெளிப்புறம் | ரூ. | 10,000/– |

## அறிவை தீர்மானிப்பது கல்வியா அல்லது மதிப்பெண்களா?

Dr. D. Kalyanakumar, Trichy-18.

மதிப்பெண் வாங்கியவர் எல்லாம் அறிவாளி அல்ல என்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட பாடத்தில் எவ்வளவு அறிவு உள்ளது என்பதை சோதிக்கவே தேர்வும் மதிப்பெண்ணும். அந்த மதிப்பெண்ணை வைத்து அறிவை எடைபோட கூடாது என்றால் நம் தேர்வு முறை தவறா ? அல்லது இந்த கருத்து தவறா ? மதிப்பெண் என்பது சான்றிதழ். கல்வி அறிவு என்பது திறமை. கார் ஓட்ட உரிமம் வாங்கி விடலாம். சிறப்பாக கார் ஓட்டுவது அனுபவத்தால் அறிவினால்) மட்டுமே வரும். சிறந்த கல்வி அறிவைப்பெற்ற பின்னால் மதிப்பெண் வாங்குவதில் சிரமம் ஏதும் இருக்காது.

600–க்கு 562.28 மதிப்பெண் பெற்று பள்ளியில் முதலிடம் பெற்ற மாணவியால் நீட்தேர்வை வெற்றிகரமாக எழுத முடியாதது ஏன் என்று யாரும் சிந்திக்கவில்லையே, என்ன காரணம் ? நீட் தேர்வு ஒரு போட்டி தேர்வு. உலகில் எந்த மூலைக்கு போனாலும் போட்டியும் போட்டி தேர்வும் இருக்கத்தான் செய்யும். அதை அணுகுவது எப்படி என்று சொல்லித் தராமல் இருந்தது சரிதானா ? +2 தேர்வில் நல்ல மார்க் வாங்கிவிடு. பிறகு கவலையே இல்லை என்ற அறிவுரை சொல்லாத பெற்றோர்களே கிடையாது. இது அறிவுள்ள அறிவுரை தானா ?

தேர்வு விடைத்தாள்கள் திருத்துவதிலும் element of subjectivity - அகவயத்தன்மை திருத்துவரின் மனநிலை அவர்களது அறிவு எதிர்பார்ப்பு அடிப்படையில் மாறுபடலாம். ஒரே விடைத்தாளை ஒன்றிற்கு மேற்பட்டவரிடம் மதிப்பிட சொன்னால் மதிப்பெண்கள் வெவ்வேறாகவும் மதிப்பெண் இடைவெளி அதிகமாகவும் இருக்கும்.

### வாழ்க்கையை அறியும் கல்வி

* கல்வி என்பதை சொத்துரிமையைப்போல அடிப்படை உரிமையாக்கி இந்தியா முழுவதும் ஒரே பாடத் திட்டத்தை ஏற்படுத்தி, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இன்றி பள்ளிக் கல்வி முதல் உயர் கல்வி வரை அனைத்தும் அரசால் இலவசமாக வழங்கப்படும் என்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

* மாணவர்களிடையே ஆளுமைப் பண்பு, பொது அறிவு, பேச்சாற்றல், நெருக்கடி வரும்போது முடிவெடுக்கும் திறன், தன்னம்பிக்கை, விளையாட்டில் சிறந்து விளங்குதல், சிந்தனைத் திறனை வளர்த்தல், படைப்பாற்றலை ஊக்குவித்தல், தனித்திறமைகளை வளர்த்தல் உள்ளிட்டவற்றை வளர்க்கும் வகையில் பாடத்திட்டங்கள், செயல்திட்டங்கள் அமைய வேண்டும். வேலை வாய்ப்புக்கு ஆதாரமாக அமையும் கல்வி அவசியம்.

ஆசிரியரை தோழராகவும், சிந்தனையாளராகவும் கருதுவது மேலைநாட்டுப் போக்கு. ஆசிரியர்களை தெய்வமாகக் கருதுவது இந்திய மண்ணின் இயல்பு. அதனால்தான் எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்கிறார்கள்.

* ஆசிரியர்கள் பண்பில் ஒழுக்கத்தில் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும். ஆசிரியர் பணி என்பது ஒரு தொழில் அல்ல. அவர்கள் சமுதாய வழிகாட்டி. மாணவர்களிடம் நன்கு பழகுபவராக இருக்க வேண்டும். அப்போதுதான் மாணவரை நல்ல குடிமகனாக மாற்ற முடியும்.

* நாட்டில் ஆண்டுதோறும் 23 கோடி பேர் தொடக்கக் கல்வி கற்றாலும், உயர்கல்விக்கு 3 கோடி பேர் மட்டுமே செல்வதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது.

* கற்பிக்கும் முறைகளில் மாற்றம் வேண்டும். யோகா வழி கல்வி, வீடியோ முறையிலான கல்வி, செயல்முறை விளக்கம் வழியிலான கல்வி, பார்த்து புரிந்துகொள்ளும் வகையிலான கல்வி வேண்டும்.

மனப்பாட முறை நமது சிந்தனைத் திறனை மழுங்கடிப்பதுடன் மதிப்பெண் பெறத்தான் உதவும். வாழ்க்கைக் கல்விக்கு உதவாது என்பது என் எண்ணம்.

---

## வருந்துகிறோம்

சீர்காழி, இந்திரா நகர் சந்திரசேகர் அவர்களின் தாயார் புஷ்பவள்ளி அம்மையார் 04–07–25 அன்றும் ,

திருவள்ளுவர் நகர் திரு. S. வேல்முருகன் அவர்கள் 13–7–25 அன்றும் ,

தியாகராஜர் நகர் திரு. திருவரசமூர்த்தி அவர்களின் தாயார் சகுந்தலா அம்மையார் 22–07–25 அன்றும்,

தாடாளன் கோயில் திரு. S. முரளி அவர்கள் 23–07–25 அன்றும் இயற்கை எய்தினார் என்பதை சீர்காழி சங்கம் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

– சி. அகோரம்,

செயலாளர்

## இல்லறம் சிறக்க

– தொடர்ச்சி

நாம் செய்யும் நல்லது, கெட்டது இவற்றின் பயன்கள் நம் வாரிசுகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும். இதைத்தான் யார் செய்த புண்ணியமோ தலைக்கு வந்தது தலைப்பாகையோ போயிற்று என்று சொல்கிறோம். தர்மம் தலைகாக்கும், தக்க சமயத்தில் உயிர் காக்கும் என்பதை நாம் அறிவோம். முடிந்த வரை மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனம் கொண்டவர்களாக உங்களை நீங்கள் தயார் செய்து கொள்ளுங்கள். ஆயிரமாகவும், லட்சங்களாகவும் உண்டியலில் பணம் போடுவதை இறைவன் எதிர்பார்க்கவில்லை. ஏழைகளுக்கும் இயலாதவர்களுக்கும் உதவிக்கரம் நீட்டுங்கள். இறைவன் உங்களின் இதயக்கோயிலில் குடியிருப்பான். பயனாளிக்கு கொடுத்து உதவும் போது உங்களின் மனநிறைவுக்கும், மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை.

இறைவன் நாம் நினைப்பது போல் மிகச் சாதாரணமானவர் அல்ல. கடவுளின் செயல்முறைகளை நம்மால் தெரிந்து கொள்ள முடியாது. அவனின் செயல் திட்டம் எப்படிப்பட்டது என்பதையும் புரிந்து கொள்ள முடியாது. அந்த அளவு மனப்பக்குவத்தையும், ஞானத்தையும் நாம் இன்னும் பெறவில்லை என்பதே உண்மை. நமக்கு என்னவெல்லாம் செய்து தர வேண்டுமோ அதை சரியான நேரத்தில் நிச்சயம் செய்து தருவார். அதில் அசைக்க முடியாத நம்பிக்கை நமக்கு வேண்டும். கடவுள் ஒவ்வொரு விஷயத்தையும் அவரவரின் கர்ம வினையின் அமைப்பின்படி செயல்படுத்துகிறார். அதற்கேற்பத்தான் அவர் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு மனிதரையும் நடத்துகிறார். ஆனால் நாம் அதைப் புரிந்துக்கொள்ளாமல் "கடவுள் இப்படி பண்ணி விட்டாரே இப்படி நடக்கும் என்று நான் கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை என்று இறைவன் மீது குறைபடுகிறோம். நமது மனம் நிறைய குறைபாடுகள் உள்ளது என்பதை யாரும் மறுக்க இயலாது. அது புரியாமல் நம்மைக்குறித்து நாம் எதையும் எடை போட முடியாது. போடவும் கூடாது. கடவுளின் ஒரு செயலின் மூலம் கஷ்டத்தைக் கொடுத்து அதன் மூலம் நமது வினைகளைக் களைந்து பக்குவப்படுத்துவார். கெட்டதும் செய்வார், நல்லதும் செய்வார். நல்லது மட்டுமே கிடைக்கப் பெற்றால் நம்மை கையில் பிடிக்க முடியாது என்பதால்தான், நம்மை பக்குவபடுத்தவே இறைவன் இரண்டையும் தருகிறார்.

குடும்ப முன்னேற்றத்திற்காக பல பொறுப்புகளை தலைமேல் ஏற்க வேண்டியுள்ளது. அவற்றில் ஒன்று ஆன்மீகம், கணவனோ, மனைவியோ "ஆன்மீக செயல்பாட்டிற்கான பொறுப்பை நான் ஏற்கிறேன்" என்று எப்போது தானே முன் வந்து ஏற்கிறார்களோ அப்போதுதான் அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு காண முடியும். இறைவனின் திருநாமத்தை வாய்விட்டுச் சொல்லி வணங்க வேண்டும். நமது புராண இதிகாசங்களிலும், உபநிடதங்களிலும், சாஸ்திரங்களிலும் புதைந்து கிடக்கின்ற அற்புதமான உண்மைகளை வெளியில் கொண்டு வர வேண்டும். நமது முன்னோர்கள் மகத்தானவர்களாக இருந்தார்கள். நாம் எத்தகைய பாரம்பரியத்திலிருந்து வந்துள்ளோம். நமது இரத்த குழாய்களில் ஓடுகிற இரத்தம் எவ்வளவு சிறந்த ரிஷிகளிடமிருந்து ஊற்றெடுத்து வந்துள்ளது என்பதையும் நாம் அறிய வேண்டும். இதனை நாம் உணர்ந்தால் பாரத தேசத்தை உலகின் குருவாக உயர்த்த முடியும் என்பது நிதர்சனமான உண்மை.

உங்களிடம் உள்ள கஷ்டங்களையும், இயலாமையையும் மறந்து இறைவன் அளித்துள்ள வரங்களை எண்ணிப்பாருங்கள். அப்போது நமக்குள் இன்னும் தன்னம்பிக்கை அதிகமாகும். நம்பிக்கையோடு வாழ்க்கை என்ற கப்பலில் பயணித்தால் இல்லறம் சிறப்பாக நடந்தேறும் என்பதை உணர்வோம்.

– இரா. திலகம்,
வையூர்.
Cell : 9789412635





## சிறுதானியங்களுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

– தொடர்ச்சி

சிறுதானியப் பயிர்களுக்கு குறைவான அளவுக்கு ஊட்டச்சத்து கொடுத்தாலே போதுமானது. நெல் மாதிரியான பகலில் 'பூக்கும்' பயிர்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெறும் போது, அதிகமான வெப்பம் இருந்தால் சரியான முறையில் விதைகள் உற்பத்தியாகாது. ஆனால், சிறுதானியப் பயிர்கள் அனைத்தும் இரவு 12 மணி முதல் அதிகாலை 4.30 மணிக்குள் மகரந்தச் சேர்க்கையை முடித்துக் கொள்வதால், வெப்பநிலைப் பிரச்சினைகள் இல்லாமல் முழுமையான அளவில் மகரந்தச் சேர்க்கை நடைபெற்று அதிக மகசூல் கிடைக்கும். புவி வெப்பமாதலால் ஏற்படும் இழப்புகள் சிறுதானியத்தில் மிகவும் குறைவு. சிறுதானியச் சாகுபடியில் குறைந்த அளவு வேலையில், குறைந்த செலவில் அதிக வருமானம் கிடைக்கும். சிறு, குறு விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியில் சிறுதானியங்கள் சாகுபடி பெரும் பங்கு வகிக்கிறது.

சிறுதானியப் பயிர்களில் ஒன்றான சாமையில் மல்லியச் சாமை, பெருஞ்சாமை, வெள்ளச்சாமை, கட்டவெட்டிச் சாமை, திருகுலாச் சாமை, சடஞ்சாமை, கருஞ்சாமை, செஞ்சாமை, சிட்டஞ்சாமை, பில்லு சாமை, போன்ற நாட்டு ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. தினையில் கெண்டித்தினை, செந்தினை, மரத்தினை, பாலாந்தினை, வெள்ளைதினை, பைந்தினை, சிறுதினை, நாட்டுத்தினை, மாப்புத்தினை, போன்ற நாட்டு ரகங்களும், வரகுப் பயிரில் திரிவரகு, புறவரகு, பெருவரகு, உடும்புக்காலி வரகு, செங்காலி வரகு, சிட்டுக்கீச்சான், வரகு போன்ற நாட்டு ரகங்களும்.... கேழ்வரகுப் பயிரில் சாட்டைக் கேழ்வரகு, காரக் கேழ்வரகு, கண்டாங்கிக் கேழ்வரகு, பெருங் கேழ்வரகு, பிச்சாகாடிக் கேழ்வரகு போன்ற ரகங்களும் பரவலாகக் காணப்படுகின்றன.

சோளத்தில் செஞ்சோளம், கருஞ்சோளம், உப்பஞ்சோளம், கருப்பு ரட்டு சோளம், சிகப்பு ரட்டு சோளம், கோவில்பட்டி மொட்ட வெள்ளைச் சோளம், அரியலூர் நெட்ட மஞ்ச சோளம் போன்ற நாட்டு ரகங்கள் காணப்படுகின்றன.

சிறுதானியத்தில் நாட்டு ரகங்களுடன் மகசூல் அதிகம் தரக்கூடிய பல பல்கலைக்கழக ரகங்களும் வெளியிடப்பட்டுள்ளன. கேழ்வரகில் பையூர் 2, கோ 14, கோ 15 போன்ற ரகங்கள், தினையில் கோ 7 என்பவற்றில் அதிகக் கிளைப்பு வரும். கதிரும் நீளமாக இருக்கும். பனிவரகு என்பது அற்புதமான ஒரு சிறுதானியம். பனிக்காலத்தில் எந்தப் பாசனமும் இல்லாமலேயே பனிப்பொழிவினால் கிடைக்கும் நீரிலேயே வளர்ந்துவிடக் கூடியது.

நம் நிலத்தின் பயிர்களான சிறுதானியங்களின் உற்பத்தியில் கவனம் செலுத்தி தன்னிறைவு அடைவோம்!

– அர்ச்சனா சுவேதாரண்யம்,

சென்னை–90.

செல் : 9943702054

## பொன் மொழிகளில் சில

**1. வெற்றி :** வெற்றிகளின் மூலம் என்னை மதிப்பிடாதீர்கள் எத்தனை முறை நான் கீழே விழுந்து மீண்டும் எழுந்தேன் என்பதன் மூலம் மதிப்பிடுங்கள். தோல்விக்குப் பல காரணங்கள் சொல்லமுடியும் . ஆனால் வெற்றிக்கு ஒரேஒரு காரணம்தான் உண்டு. அது கடும் உழைப்பு. – நெல்சன் மண்டேலா

**2. மகிழ்ச்சி :** மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் வாழ்க்கை சுமக்கமுடியாத சுமையாகி விடும். – பெர்னாட்ஷா

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/8** செல்வி **R. சுவாதிகா**<br>மூலம் – 3ம் பாதம்<br>சென்னிமலையான்<br>பூர்வீகம் : கல்லக்குடி – டால்மியாபுரம்<br>விருப்பம் : பட்டம் பயின்று நல்ல வேலையில் உள்ள மணமகன் | **17.3.2001**<br>150 cm | B.E., (EEE) | | திரு. S. இராஜாராமன்,<br>5, கர்ணம் தெரு,<br>கல்லக்குடி – டால்மியாபுரம்,<br>லால்குடி Tk.,<br>திருச்சி Dt. – **621 652.**<br>Cell : **99430 39473, 97877 83735** |
| **B 2/8** செல்வி **ம. தனலட்சுமி**<br>உத்திரம் 4ம் பாதம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம் | **7.5.98**<br>154 cm | B.Tech.<br>(CSE) | Software Engineer<br>Epsilon<br>Bangalore<br>Rs. 12,00,000/PA | திரு. க. மணிகண்டன்,<br>5/2, காளமேகம் தெரு,<br>கிழக்கு தாம்பரம்,<br>சென்னை – **600 059.**<br>Cell : **99416 20355, 79041 97546, 94447 11045** |
| **B 3/8** செல்வி **G. மகாலட்சுமி**<br>மகம்<br>கனகராய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன். | **15.11.95**<br>165 cm | B.E. (EEE) | Software Company | திரு. R. ஞானசம்மந்தம்,<br>No. 35, ஷர்மிளா அவென்யு,<br>விபிஷ்ணபுரம், அம்மாபேட்டை,<br>சிதம்பரம் – **608 401.**<br>Cell: **99769 97310,90954 68213** (W) |
| **B 4/8** செல்வி<br>**Dr. M. Parvathavarthini**<br>Uthiradam<br>Pallavaraya<br>பூர்வீகம் : ஸ்ரீவைகுண்டம்<br>விருப்பம் : Doctors - MD, MS, DM only | 20.05.2003 | MBBS<br>Internship<br>till April 2026 | | Prof. Dr. S Murugan, MD, FRCP (UK)<br>Plot No. 600, New No. 5, 6th Street,<br>Anna Nagar West Extension,<br>Chennai - 600 101.<br>Cell : 98840 12206 / 97909 54956 |
| **B 5/8** செல்வி **சோ. ரம்யா**<br>சித்திரை<br>பேருட<br>பூர்வீகம் : திருவலங்காடு | **23.12.97**<br>146 cm | B.Sc. (CS), | OMEGA, Trichy<br>Rs. 1,50,000/PA | திரு. G. சோமசுந்தரம்,<br>238A, காவேரி சாலை,<br>தீரன்மாநகர், மணிகண்டம்,<br>திருச்சி – **620 012.**<br>Cell : **94420 15126, 85087 59837** |
| **B 6/8** செல்வி **R. சுபஸ்ரீ**<br>அஸ்வினி<br>கொங்கராய<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : அரசு, வங்கி, IT துறைகளில் பணிபுரியும் வரன். | **09.09.98**<br>160 cm | M.E.,<br>(CEG<br>Campus) | Asst. Professor (CSE)<br>Rajalakshmi Engg.<br>College, Chennai | திரு. P.G. ராமமூர்த்தி,<br>ராணி மெடிக்கல்ஸ்,<br>**150,** மெயின் ரோடு,<br>பெண்ணாடம் – **606 105.**<br>Cell : **99761 77910** |
| **B 7/8** செல்வி **G. ஹரிணி**<br>ரோகிணி<br>வஞ்சனுட<br>பூர்வீகம் : கிளிமங்கலம்<br>விருப்பம் : சமபடிப்பு, USA வில் நல்ல பணியில் உள்ள வரன். | **16.5.99**<br>168 cm | BS (CS)<br>from UC | Big Tech Company<br>in California | திருமதி. G. அம்புஜவல்லி,<br>26, வெள்ளையன் தெரு,<br>Sanskudil, சிதம்பரம் – **608 001.**<br>Cell : **+19253223120, +19253223131**<br>**99426 16292** |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/8** செல்வன் **Kavin Adithya**<br>Rohini<br>Komangliya<br>பூர்வீகம் : Cuddalore | 02.05.95<br>5' - 6" | B.Sc., in Visual Communication Diploma with a Specialization in film Editing | Film and AD Editor in the Media Industry<br>Rs. 8 LPA (Media)<br>Rs. 3.4 LPA (Others) | திரு. Vinayagam,<br>1407, Cladiusb, Alliance Galharia, Residence, Arul Murugan Nagar,<br>Old Pallavaram, Chennai<br>Cell : **99423 66520/ 98658 86332 98800 46312**<br>E-mail : s.vinayagam@gmail.com |
| **G 2/8** செல்வன் **S. Muthuvel**<br>Thiruvonam<br>Nepukuda<br>பூர்வீகம் : Gudalour | **26.05.89** | B.E. (Mech) | Design Engineer<br>GTS Tool Plast LLP<br>Chennai<br>Rs. 30,000/PM | திரு. G. Selvam,<br>120/1, Middle Street,<br>Gudalour,<br>Cudallore Dist.<br>Cell : **95243 25807** |
| **G 3/8** செல்வன் **V. வெங்கடேசன்**<br>மகம்<br>சாத்துகுட<br>பூர்வீகம் : T.V. புத்தூர், விருத்தாசலம்<br>விருப்பம் : குடும்பத்திற்கு ஏற்ற வரன் | **22.02.97** | DME | இராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ்<br>சென்னை<br>Rs. 35,000/PM | திரு. வீரசுப்பிரமணியன்,<br>அகரஆலம்பாடி (PO),<br>சேத்தியாதோப்பு வழி,<br>புவனகிரி (Tk) – **608 702.**<br>Cell : **97861 99060**<br>E-mail : subramaniyam.ip@gmail.com |
| **G 4/8** செல்வன் **கு. ஸ்ரீ அஸ்வத்**<br>உத்திரட்டாதி<br>முதனுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : தகுதியான வரன் | **11.11.97**<br>178 cm | B.E. (EEE) | System Engineer<br>Chennai | திரு. கோ. குஞ்சிதபாதம்,<br>20/2, மேற்கு ரத வீதி,<br>பெண்ணாடம் – **606 105.**<br>Cell : **88705 55569, 98423 57920** |
| **G 5/8** செல்வன் **சு. ஸ்ரீதரன்**<br>பூரட்டாதி 2ம் பாதம்<br>பாக்குமுட<br>பூர்வீகம் : மனக்குடையான், அரியலூர் மாவட்டம் | **21.10.99**<br>165 cm | B.Tech. (Chemical Engg.) | இந்திய அஞ்சல் துறை, சென்னை<br>Rs. 4,80,000 / PA | திரு. சுப்பிரமணியன்,<br>**70,** வடக்கு வீதி, குருக்கத்தஞ்சேரி,<br>கிளிமங்களம் அஞ்சல்,<br>பெண்ணாடம் வழி,<br>திட்டக்குடி TK. – **606 105.**<br>Cell : **94424 43577**<br>E-mail : subramaniyam.ip@gmail.com |
| **G 6/8** செல்வன் **V. அஜித்குமரன்**<br>அசுவிணி<br>பருவுட<br>பூர்வீகம் : அருகேரி (பெண்ணாடம்)<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | **21.11.99**<br>174 cm | B.E. (MCT) | State Bank of India<br>Salem<br>Rs. 8 Lakhs/PA | திரு. R. வரதராஜன்,<br>2/632, ஆரமரத்துகாடு By Pass<br>காமராஜர் சிலை அருகில்,<br>எருமாபாளையம் PO.,<br>சேலம் – **636 015.**<br>Cell: **9443134352** (W), **9442213435** |
| **G 7/8** செல்வன் **S. செங்குட்டுவன்**<br>அஸ்வினி<br>பொண்ணமுடையார்<br>பூர்வீகம் : விக்கிரமங்கலம் | **19.08.92**<br>175 cm | B.E. Mechanical | 2's Advertising Pvt. Ltd., Singapore<br>Robot Programmer | திரு. சா. சுப்பிரமணியன்,<br>போஸ்ட் ஆபீஸ் தெரு,<br>விக்கிரமங்கலம்,<br>அரியலூர் மாவட்டம் – **621 701.**<br>Cell : **86757 03850, 73389 34255** |
| **G 8/8** செல்வன் **P. சபரிநாத்**<br>பூரம்<br>வில்வராய<br>பூர்வீகம் : கார்குடல்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள படித்த பெண் | **23.5.99**<br>176 cm | M.Sc., MBA | Gavsit Field<br>சோழிங்கநல்லூர் | திரு. K. பழனி,<br>அன்பு இல்லம், **48,** முல்லை தெரு,<br>அன்பு நகர்,<br>பூதாமூர் – **606 003.**<br>Cell : **9944998134, 99424 33134** |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/8** செல்வன் **R. சந்தோஷ்**<br>உத்திரட்டாதி<br>வெண்சாலுட<br>பூர்வீகம் : மணக்குடி (மயிலாடுதுறை) | **06.08.93**<br>170 cm | B.A.,<br>M.A., Music<br>M.Phil.,<br>Ph.D.<br>இசைத் துறை | Asst. Professor in Violin, Tamilnadu Dr. J. Jayalalitha Music & Fine arts University, Chennai<br>Rs. 7 Lakhs/PA | திரு. B. Rajalingam,<br>4/221, Main Road, Mannambanthal,<br>Mayiladuthurai - 609 305.<br>Cell : **94433 89398 / 89035 83224** |
| **G 10/8** செல்வன் **M. விஸ்வக்**<br>மிருகசீரிஷம்<br>இரவுட<br>பூர்வீகம் : துணிசிரமேடு, சிதம்பரம் Tk.<br>விருப்பம் : படித்த குணமுள்ள வரன் | **16.05.91**<br>165 cm | DME<br>BBA, MBA | Senior Executive Muthoot Finance Cor. Ltd. (Home NBFC, Banking Service, Chidambaram)<br>Rs. 4.80 Lakhs/PA | திரு. V. முருகானந்தம்,<br>**3/184,** சிவன் கோவில் தெரு,<br>துணிசிரமேடு, சி.வீரசோழன் (PO)<br>சிதம்பரம் வட்டம்,<br>கடலூர் மாவட்டம்<br>Cell : **97156 38810, 97156 38811** |
| **G 11/8** செல்வன் **M. வெங்கடகந்தசாமி**<br>பரணி<br>பழுவுட<br>பூர்வீகம் : பெருமுளை, திட்டக்குடி Tk.<br>விருப்பம் : சமபடிப்பு MBBS | **24.9.94**<br>178 cm | MBBS | SRM, Potheri<br>Rs. 7 Lakhs/PA | திரு. K. சிங்காரவேலன்,<br>SI திருப்போரூர்,<br>PD5/21, PNPA Own House<br>Melakottaiyur, Chennai - 600 127.<br>Cell : **94981 65671, 86374 79495** |

## டீ

அன்றாட வாழ்வில் நாம் காலையில் தூங்கி எழுந்தவுடன் நாம் முதலில் குடிப்பது தேநீர்தான். இந்த தேநீர் என்பது நமது வாழ்வுடன் இணைந்த ஒரு இனிப்பு பொருளாகவே மாறிவிட்டது.

நம் உடல் இயக்கத்துக்கு காரணமான மூளை சோர்வடையும்பொழுது நமக்கு முதல் விருப்பமாக இருப்பது தேநீர்தான். தேநீர் புத்துணர்ச்சி அளித்தாலும் அதில் சில பக்கவிளைவுகளும் உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

இளைஞர் முதல் பெரியோர் வரை தினமும் குறைந்தது 5 முறை கூட காபி, தேநீர் குடிப்பவர்கள் இருக்கிறார்கள். இப்படி டீ குடிப்பது நமக்கு உற்சாகத்தை தந்தாலும் அதனை தவறான முறையில் பருகும் போதுதான் நமக்கு அது தீங்காக விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். அப்படி தவறான வழிகளில் டீ குடிக்கும்போது என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகிறது என்பதை பார்க்கலாம்.

அடுப்பில் வைத்து தேநீரை திரும்ப திரும்ப சூடுபடுத்தும் போது அது மிகவும் தீங்கு விளைவிக்கும் பானமாக மாற வாய்ப்புண்டு. மேலும் தேநீரின் உண்மையான சுவையை குறைத்து அதில் அமிலத்தன்மையும் கூடுகிறது. தேவைப்படும் போது அந்தந்த சமயத்தில் தயார் செய்யப்படும் தேநீரை குடிப்பதே உடலுக்கு உகந்ததாக இருக்கும்.

ஒருவேளை காலியான வயிற்றில் டீ குடிக்கும் நிலை ஏற்பட்டால் அதனுடன் பிஸ்கட் சேர்த்து எடுத்துக்கொண்டால் வயிற்றுக்கு நல்லது. ஆனால் காலையில் வெறும் வயிற்றில் டீ குடித்தால் உடல் அமிலத்தன்மையை அதிகரித்து நமக்கு பசியின்மையை ஏற்படுத்திவிடும்.

தொடர்ந்து காலியான வயிற்றிலேயே தேநீர் குடித்து வந்தால் அது நமது வளர்ச்சி மாற்றத்தில் பொல்லாத விளைவுகளை ஏற்படுத்தும். முதலில் பசியை குறைத்து பிறகு உடல் எடையை அதிகரிக்க செய்துவிடும். அடுப்பிலிருந்து இறக்கிய சூட்டுடன் அப்படியே தேநீர் குடிக்கக்கூடாது. ஏனெனில் சூடான தேநீர் பருகினால் அது வாய், தொண்டை, உணவுக்குழாய் ஆகியவற்றை பாதிப்படைய செய்வதுடன் வயிற்றில் அல்சர் போன்ற வலி கலந்த எரிச்சலையும் உண்டாக்கிவிடும்.

ஆனால் அதிக அளவு டீத்தூள் கலந்து டீ குடிப்பதும் ஒருவிதத்தில் தலைவலியை உருவாக்கும். அதன் மூலம் உடலில் நீர்சத்து குறைவு, பதற்றம் போன்ற ஆரோக்கியக் குறைகளை ஏற்படுத்திவிடும்.

"அளவான உணவு
உடலுக்கு நலம்
அளவோடு பழகு
உறவுக்கும் நலம்"

– ஐஸ்வர்யா முத்து, கொண்டாங்குடி

# மணமகள் தேவை

பெயர் — **செல்வன் M. சாய்ஆனந்த்**
படிப்பு — M.S. (Computer Science)
வேலை — Striim Engineering Servies Pvt. Ltd.,
Guindy, Chennai
பிறந்த தேதி — 06.01.1996
உயரம் — 178cm
நட்சத்திரம் — புனர்பூசம்
கோத்திரம் — விச்சுட
பூர்வீகம் — தென்பாதி, காட்டுமன்னார்குடி
தகப்பனார் — **ப. மோகன்**, B.Sc.,
Block Development Officer, (Retd.)
தாயார் — **பா. ராமா**, M.A., M.Ed.,
ஆசிரியர், தனியார் பள்ளி, சென்னை
முகவரி — 13, பாடசாலை தெரு,
லட்சுமிபுரம், குரோம்பேட்டை,
சென்னை - 600 044.
Cell : 94440 59747
E-mail : accessmohan@gmail.com



பெயர் — **செல்வன் K. பிரசன்னவாசன்**
படிப்பு — MCA
வேலை — Manager, RM-WFM, AGS Health, Chennai
Rs. 10,00,000/PA
பிறந்த தேதி — 26.08.1993
உயரம் — 170cm
நட்சத்திரம் — மூலம் 1
கோத்திரம் — பாலுட
பூர்வீகம் — தீபாமங்களம், நன்னிலம் தாலுக்கா
தகப்பனார் — **கா. கீர்த்திவாசன்**
தாயார் — **கீ. சுமதி**
வன்னிக்குடி மொழையூர், பந்தநல்லூர்
முகவரி — 43, கோசி மணி நகர், மெயின் ரோடு,
மேல அம்மாசத்திரம் - 612 103, கும்பகோணம்
Cell : 94896 56270
விருப்பம் — படித்த குணவதியான பெண்.



# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி **R.R. THEJHASVINI** |
| படிப்பு | BE (ECE)., MLIS., |
| வேலை | Associate, Mosys Consultancy Services Pt. Ltd., |
| பிறந்த தேதி | 02.08.1998 |
| உயரம் | 163 cm |
| நட்சத்திரம் | விசாகம் |
| கோத்திரம் | செஞ்சலுட |
| பூர்வீகம் | சிதம்பரம் |
| தகப்பனார் | முனைவர் **R. Rathinasabapati,** M.A., MLIS., Ph.D., (Fulbright Scholar USA, Sr. Library & Information Officer (Retd.) ICMR) |
| தாயார் | **Rajaathi Sabapati,** DN & DM., (Staff Nurse, GIRM, Chennai) |
| முகவரி | 323/16 Ambika Street, Flat No.T1, Akshara Paradise, G G Nagar, Chennai - 600 107. Cell : 94451 65206 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் **Subramanian S** |
| படிப்பு | MBA |
| வேலை | HR Lead, Private Sector Rs. 30 Lakhs P.A. |
| பிறந்த தேதி | 02.03.1995 |
| உயரம் | 5' - 8" |
| நட்சத்திரம் | Pooratathi |
| கோத்திரம் | Konguraya |
| பூர்வீகம் | Tirunelveli |
| தகப்பனார் | **S. சங்கரநாராயணன்** |
| தாயார் | **S. சண்முகசுந்தரி** |
| முகவரி | D801, Marvel Fria, Marvel Fria Road, Wagholi, Pune, Maharashtra - 4712 207. Cell : 96297 76347 |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் **S. கௌசிக்** |
| படிப்பு | B.Tech., MBA., |
| வேலை | Sr. Project Engineer, Qatar |
| பிறந்த தேதி | 21.05.1995 |
| உயரம் | 181 cm |
| நட்சத்திரம் | அவிட்டம் |
| கோத்திரம் | நன்னுட |
| பூர்வீகம் | மழவராயநல்லூர் - சிதம்பரம் |
| தகப்பனார் | **V. சங்கர்,** தலைமை மருந்தாளுநர் |
| தாயார் | **S. வித்யா,** (பாலாகுடி) இல்லத்தரசி |
| முகவரி | 53, தேவதாஸ் நகர், விபீஷ்ணபுரம், |
| | சிதம்பரம் - 608 001. |
| | Cell : 94862 23517, 70100 41488 |
| விருப்பம் | சமபடிப்புடன் வெளிநாட்டில் பணிபுரிய விருப்பம் உள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் **G. அஜய் அரவிந்த்** |
| படிப்பு | B.Tech. (IT), |
| வேலை | Software Development Engineer - II |
| | Amazon, Chennai |
| | Rs. 40 Lakhs / PA (in hand) |
| பிறந்த தேதி | 05.05.1999 |
| உயரம் | 171 cm |
| நட்சத்திரம் | பூராடம் (பாதம் 2) |
| கோத்திரம் | எருக்குட |
| பூர்வீகம் | சிறகிழுந்தநல்லூர் |
| தகப்பனார் | **M. கோவிந்தராஜன்,** தலைமை அஞ்சலக அதிகாரி, கடலூர் தலைமை அஞ்சலகம் |
| தாயார் | **R. சத்தியபாமா,** |
| | துணை அஞ்சலக அதிகாரி, கடலூர் |
| முகவரி | 64, பாப்பம்மாள் நகர், கோண்டூர், |
| | கடலூர் - 607 006. |
| | Cell : 94431 59262, 94421 23575 |



# மணமகள் தேவை

பெயர் செல்வன் **கா. சக்தி விக்னேஷ்**
படிப்பு DEEE
வேலை Electrical Engineer,
DAC Developers Pvt. Ltd.,
Rs. 7,00,000/PA



பிறந்த தேதி 17.09.1996
நட்சத்திரம் விசாகம்
கோத்திரம் ஆவுடை
பூர்வீகம் ஆத்துக்குடி - சீர்காழி
தகப்பனார் **வே. கார்த்திக் பிள்ளை** (லேட்)
தாயார் **கா. உஷா**
முகவரி பிளாட் எண். S1,
நந்தவனம்,
அகஸ்தியர் தெரு, கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059.
Cell : 95001 99331 / 93455 87884
விருப்பம் Any Degree

பெயர் செல்வன் **கா. வருண் நேரு**
படிப்பு B.Tech (IT)
வேலை Specialist - Software Engineering
L T I Mindtree, Chennai
Rs. 15 Lakhs / PA



பிறந்த தேதி 22.11.1986
உயரம் 166 cm
நட்சத்திரம் பூசம்
கோத்திரம் எரவுட
பூர்வீகம் இறையூர் (பெண்ணாடம்)
தகப்பனார் **மு. கார்த்திகேயன்**
தாயார் **கா. தனலட்சுமி**
(செந்துறை)
முகவரி 174/2, கொத்தட்டை ரோடு,
இறையூர் – 606 111.
கடலூர் மாவட்டம்
Cell : 98844 91678
E-mail : dhanamkarthi76@gmail.com

பெயர் செல்வன் **ச. ஆனந்தகுமார்**
படிப்பு BCA
வேலை Deputy Manager - Sales
at DAC Developers Pvt. Ltd., Chennai
Rs. 10 Lakhs/PA



பிறந்த தேதி 23.03.1997
நட்சத்திரம் உத்திரம்
கோத்திரம் ஆவுட
பூர்வீகம் சிதம்பரம்
தகப்பனார் **சந்தானம் பிள்ளை**
தாயார் **இந்திராணி**
முகவரி ஆனந்த பிரமிளம்,
எண் 4, காளிதாசர் தெரு,
கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059.
Cell : 95001 99331 / 99526 16139 /
73582 23877 / 89400 47753

பெயர் செல்வன் **சி. சிவானந்தம்**
படிப்பு B.Tech (ECE), M.Tech. (NIS)
வேலை Network Engineer (RAN),
LMJ Innovations Amentum,
Bengaluru
Rs. 6 Lakhs / PA



பிறந்த தேதி 21.06.1999
நட்சத்திரம் உத்திரம்
கோத்திரம் முள்ளுட
பூர்வீகம் வரிச்சிக்குடி, காரைக்கால்
தகப்பனார் **குமார் (எ) சிவ. சிதம்பரம்,** M.Sc., B.Ed.,
மெடிக்கல் ஷாப், காரைக்கால்
தாயார் **S. சித்ரா,** B.Sc., D.Pharm, இல்லத்தரசி
(திருவிளையாட்டம்)
முகவரி 1, பங்களா தெரு, தேவானூர் சாலை,
வரிச்சிக்குடி,
காரைக்கால் மாவட்டம் - 609 609.
Cell : 97873 10010, 91509 16765
விருப்பம் பணியில் உள்ள வரன்

# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் Kalyanasundaram |
| படிப்பு | B.E. (Civil Engineering) |
| வேலை | Govt. Job JDO, Trichy |
| பிறந்த தேதி | 22.09.1996 |
| நட்சத்திரம் | Uthiradam |
| கோத்திரம் | Kalingarayar |
| பூர்வீகம் | Argeri |
| தகப்பனார் | Dhuraisami |
| முகவரி | West Street, Argeri - 606 105.<br>Kothattai (PO),<br>Cudadalore (Dt.)<br>Cell : 97157 04601, 97157 04600 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் எஸ். சுதர்சன் |
| படிப்பு | B.E. (CSE), M.B.A., |
| வேலை | Photon Interactive Pvt. Ltd.,<br>Samsung, Guindy<br>Rs. 14,50,000 / PA |
| பிறந்த தேதி | 26.08.1997 |
| நட்சத்திரம் | ரோகிணி |
| கோத்திரம் | நெப்புடையான் |
| பூர்வீகம் | அம்பிகாபுரம் |
| தகப்பனார் | S. சுகுமார், விவசாயம் & அடகுகடை |
| தாயார் | S. சுமதி, (கன்னியாகுடி) |
| முகவரி | அம்பிகாபுரம்,<br>ஜெயங்கொண்டம் - 612 902.<br>அரியலூர் மாவட்டம்<br>Cell : 70940 77030, 89037 87841<br>Cell : 94435 64662, 63809 28662<br>E-mail : mohanksss64@gmail.com |



| | |
|---|---|
| பெயர் | செல்வி V. Atshaya |
| படிப்பு | Ph.D. (Final Year) |
| பிறந்த தேதி | 29.05.1997 |
| உயரம் | 5 Ft. |
| நட்சத்திரம் | Sathayam 3பாதம் |
| கோத்திரம் | Kunamangaluda |
| பூர்வீகம் | Kanniyakudi |
| தகப்பனார் | S. Vijayakumar<br>Own Business (Marketing) |
| தாயார் | V. Valli, M.A., M.Phil., B.Ed., |
| முகவரி | Cell : 94440 83805<br>E-mail : abiakshai@yahoo.com |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் SARAVANAKUMAR G. |
| படிப்பு | B.E. (Electrical & Electronics Engg.) |
| வேலை | Salcomp Manufacturing Pvt. Ltd.,<br>Sriperumbudur<br>Rs. 35,000/PM |
| பிறந்த தேதி | 01.05.1994 |
| உயரம் | 5' - 9" |
| நட்சத்திரம் | ரோகிணி |
| கோத்திரம் | Kadamuda |
| பூர்வீகம் | கூடலூர் |
| தகப்பனார் | Gnanaprakasam .K.V |
| தாயார் | Vasugi .G |
| முகவரி | 94, Middle Street, Gudalur Post,<br>Tittakudi Taluk, Cuddalore District<br>PIN - 606 111.<br>Cell : 96889 51066, 73738 31555 |

# சதாபிஷேக விழா






கும்பகோணம் திரு. **கோ. சடகோபன்** (பேராசிரியர் ஓய்வு) திருமதி. **சூரியகுமாரி சடகோபன்** இவர்களின் சதாபிஷேக விழா **02.07.2025** அன்று ஸ்ரீ அண்ணன் பெருமாள் கோயில் சன்னதியில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**பேரன், பேத்திகள்**
**S. பிரியதர்ஷினி – S. விக்னேஷ்வரன்**
**S. பிரவீன்குமார்**
**M. சௌஜன்யா, M. மனஸ்வினி**
**S. ஆதித்யா, S. பூரணி**

அன்புடன்
**S. வைஜெயந்தி -**
**S. செந்தமிழ்செல்வன்**
**S. நளினி - S. முத்துக்குமரன்**
**S. சங்கீதா – S. சிவராஜ்**

# வாழ்க மணமக்கள்




**R. சிபி ஆனந்த்**, B.Tech.,
(Dedalus, Chennai)

**G. மீனாட்சி**, B.E.,
(Wipro Ltd., Chennai)

மணநாள் : **13.07.2025**

இடம் : **ஸ்ரீலஷ்மி பிரசன்னா திருமண மண்டபம்,** காட்டுப்பாக்கம், சென்னை






**S. கல்யாணம்**
**K. மங்களம்**
**K. கோபிநாதன்**
**ஸ்ரீமதி**
**G. ஹரிஹரன்**

**S. ராமசாமி**
**P. கோமதி**
**R. கண்ணன்**
**K. சிந்துபார்வதி**
**K. தனிஷ் ராகவ்**
பெங்களூர்

# வாழ்த்துகிறோம்

வாழ்க கார்குலம் ! வளர்க சைவநெறி !!



## அகவை 80 காணும் கார்குலத்து வள்ளல்

திரு. ச.வெங்கடேசன் பிள்ளை

திருமதி. ஞானாம்பிகை

தம்பதியினரை வணங்கி வாழ்த்துகிறோம்...!

## ஆயிரம் பிறை கண்ட நாயகர்

ஆயிரம் பிறை கண்ட அற்புத மனிதம் இவர்
கல்வி ஒளி பரப்பி வரும் கார்குலத்துச்சூரியன்
கரம் நீட்டியவற்கெல்லாம் கருணை மழை பொழியும் வேங்கடம் உடையான்
ராதாவின் இதயமாய் விளங்கும் நம் இனத்தின் கர்ணன் இவர்
ஞானத்தைக் கொண்டதனால் ஞானத்தை வெல்லும் திறம் பெற்ற பெரியவர்
எம் இதயங்களில் இமயமாய் வாழ்ந்திருக்கும் எங்கள் பாசமிகு ஐயா
நூறாண்டு வாழ வேண்டும். அன்பால் எங்களை ஆளவேண்டும்.

இவண்

**மதுரை மாவட்ட கார்காத்த வேளாளர் சங்கம்**

21/30, முதல் வீதி, ஹார்விநகர், அரசரடி, மதுரை-625 016.

பதிவு எண் : 242/2017

## இந்திய அரசியல் சாஸனம் - பகுதி 4

### CONSTITUTION OF INDIA - Part 4

மேலையூர் ச.அன்பழகன். 98413 73184

பகுதி 4 என்று தலைப்பு கொடுத்துள்ளேனே இதற்கு முந்தின மூன்று பகுதிகளை எப்போது எழுதினேன் என்று குழப்பமடைய வேண்டாம் . நான் எழுதியுள்ள பொதுச் சட்டங்கள் நூலின் 1 ஆம் பாகத்தில் " அறுபதாண்டு நிறைவு பெற்ற இந்திய அரசியல் சாஸனம் – சில தகவல்கள் " என்ற தலைப்பில் எழுதியது தான் முதல் பகுதி . நம்முடைய அரசியல் சாஸனம் பற்றிய பொதுவான அம்சங்களைப் பற்றிக் கூறிய அக்கட்டுரையில் , மிக நீளமாக எழுதப்பட்ட அரசியல் சாஸனம் , சட்டத்தை உருவாக்கும் சட்ட மன்றம், வரைவு, மத்திய அரசின் அமைப்பு , முகப்புரை ,அடிப்படை உரிமைகள் மற்றும் ஆட்சி மொழி பற்றி ஓரளவு சொல்லியிருந்தேன் அதில் அரசியல் சாஸனத் திருத்தம் பற்றியும் கோடிட்டுக் காட்டி இருந்தேன்.

அடுத்ததாக பொதுச் சட்டங்கள் நூலின் 2 ஆம் பாகத்தில் அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தங்கள் பற்றி நான் எழுதி இருந்தது தான் பகுதி 2அரசியல் சாஸனத் திருத்தங்கள் பற்றி சற்று விரிவாகக் குறிப்பிட்டுள்ள அக்கட்டுரையில் முதல் மற்றும் 100 ஆவது அரசியல் சட்டத் திருத்தம் பற்றியும் கூறி இருந்தேன்.

மூன்றாவதாக பொதுச் சட்டங்கள் நூலின் – 5 ஆம் பாகத்தில் நான் எழுதி இருந்த " நமது அரசியல் சாஸனம் " மேலும் சில தகவல்கள் என்ற கட்டுரை தான் பகுதி 3 ஆகும் அதில் இந்திய சுதந்திரம், தேசிய உரிமை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் , அரசியல் சட்டத்தின் இதர முக்கிய அம்சங்கள் சட்டத்தின் முக்கிய வழி முறைகள், மது விற்பனை, நாடாளும் மன்றத்தில் பயன் படுத்தும் மொழி குடியரசுத் தலைவரின் அதிகாரம் மற்றும் சில சுவாரஸ்யமான சம்பவங்கள் பற்றியும் எழுதி இருந்தேன் அத்துடன் நமது அரசியல் சாஸனத்துக்கு பிற நாடுகளிலிருந்து பெறப்பட்ட அம்சங்கள் பற்றி யும் சிறிது குறிப்பிட்டிருந்தேன்.

எனவே இக்கட்டுரை , "இந்திய அரசியல் சாஸனம் " பற்றிய பகுதி 4 என்பது உறுதியாகிறது மேலே சொல்லிய மூன்று பகுதிகளிலும் சொல்லாதவைகளை மட்டும் இப்பகுதியில் சொல்ல முயற்சிக்கிறேன்.

அரசியல் சட்டத் திருத்தம்

**1. எத்தனை திருத்தங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன?**

நம்முடைய அரசியல் சாஸனத் திருத்ததைப் பொறுத்த வரை 2021 ஆம் ஆண்டு நிலவரப்படி அதுவரை அரசியல் சாஸனத் திருத்த மசோதாக்கள் 127 கொண்டு வரப்பட்டு அவற்றில் 105 அரசியல் சட்டத்திருத்தங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளன 127 அரசியல் சாஸனத் திருத்த மசோதா 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் தேதி மக்களவையில் நிறை வேற்றப்பட்டு 11 ஆகஸ்ட் 2021 அன்று மாநிலங்களவையிலும் நிறை வேற்றப்பட்டுள்ளது OBC லிஸ்டில் வேறு ஜாதிகளைச் சேர்க்க மாநிலங்களுக்கு அதிகாரம் கொடுப்பதே இந்த மசோதாவாகும்.

105 அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், மத்திய அரசின் நோக்கங்களுக்காக மத்தியப் பட்டியலில் சமூக மற்றும் கல்வியில் பின்தங்கிய வகுப்பினரைக் குறிப்பிடும் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தைக் குறிப்பிடும் வகையில் 342A சட்டப்பிரிவைத் திருத்துகிறது. இது ஆகஸ்ட் 11, 2021 முதல் நடைமுறைக்கு வந்தது.

**2. எதற்காகத் திருத்தங்கள் ?**

போதுமானதாக இல்லாத விதிகளை சரிசெய்யவும், புதிய தேவைகளுக்குப் பதிலளிப்பதற்காகவும், கூடுதல் உரிமைகள் உட்பட பலவற்றை சரிசெய்யவும், அரசியலமைப்புகள் காலப்போக்கில் திருத்தப்பட வேண்டும். இல்லையெனில், ஒரு அரசியலமைப்புச் சட்டம் காலப்போக்கில் சமூக யதார்த்தங்களையும் அரசியல் தேவைகளையும் பிரதிபலிக்க முடியாது.

**3. திருத்தங்களை எங்கே கொண்டு வரலாம்?**

அரசியல் சாஸனத்துக்கு திருத்தம் கொண்டு வருவதற்கு அது மசோதா வடிவில் நாடாளு மன்றத்தின் இரண்டு அவைகளில் ஒன்றில் கொண்டு வரப்பட வேண்டும் அவ்வாறு கொண்டு வரப்படும் மசோதா அவையில் உள்ள உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களால் நிறை வேற்றப்பட வேண்டும் அவைகளில் ஆஜராகி உள்ளவர்களில் 3ல் 2 பங்குக்கு குறையாதவர்கள் ஆதரவளிக்க வேண்டும்.

**4. திருத்தம் கொண்டு வரும் மூன்று முறைகள்**

நம்முடைய அரசியல் அமைப்புச்சட்டம் 1949ல் இயற்றப்பட்டு 1950 ல் அமுலுக்கு வந்த போதே, அதனை

உருவாக்கிய , தீர்க்க தரிசனம் மிக்க நம்முடைய தலைவர்கள் பிற்காலங்களில் அரசியல் சாஸனம் திருத்தம் செய்யத் தேவைப் பட்டால் திருத்தப்பட வேண்டும் என்பதற்காக சட்டத்திருத்தம் பற்றி அந்த சாசனத் திலேயே வழி வகை செய்துள்ளார்கள்.

பகுதி 20 பிரிவு 368 ல் மூன்று வகை அரசியல் சாஸனத்திருத்தங்கள் பற்றிக் கூறப்படுகிறது.

**சாதாரணப் பெரும்பான்மை:-**

அரசியல்சாஸனத்திருத்தம்குடியரசுத்தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்முன்பு பாராளுமன்றத்துக்கு வந்து வாக்களித்த உறுப்பினர்களில் பெரும்பான்மை பெற்று அனுப்புதல் .

**சிறப்புப் பெரும்பான்மை:-**

இந்த வகையில் பாராளுமன்றத்துக்கு வந்து வாக்களித்த உறுப்பினர்களில் 3 ல் 2 பங்கு பெரும்பான்மை பெறுதல். அத்தகைய 3 ல் 2 பங்கு எண் ணிக்கை பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் பாதிக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

பிரிவு 13ன் படி நம்முடைய அரசியல் சாஸனத்தின் அடிப்படை அமைப்புளை மாற்றும் வகையில் எந்த வித சட்டமும் இயற்றலாகாது.

**5. சட்ட திருத்தம் பொதுவான அம்சமா ?**

மாறிவரும் நிலைமைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ள இந்திய அரசியலமைப்புச்சட்டம் அதன் திருத்தத்துக்கு வழி வழங்குகிறது. அரசியலமைப்பின் ஒரு பகுதியில் உள்ள 368 வது பிரிவு அரசியலமைப்பு மற்றும் அதன் நடைமுறையை திருத்துவதற்கு பாராளுமன்றத்தின் அதிகாரங்களைக் குறிக்கிறது.

உலக அளவில் பார்த்தோமானால் அரசியல் சட்டத்தைத் திருத்துவதும் தேவைப் பட்டால் அதனைத் திரும்ப எழுதுவதும் பொதுவான அம்சம்தான். ஏற்கனவே சொன்ன மாதிரி நம்முடைய அரசியல் சட்டத்தில் அதற்கு வகை செய்து வழி முறைகளையும் நிர்ணயித்துள்ளது. திருத்தத்தின் தன்மையைப் பொறுத்து மேலே சொன்ன மூன்று முறைகளில் அதாவது மக்களவை மற்றும் மாநிலங்களவை இரண்டிலும் சாதாரணப் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு, சிறப்புப் பெரும் பான்மை என்னும் வந்திருந்த உறுப்பினர்களில் 3ல் 2 பங்கு உறுப்பினர்கள் ஆதரவு அல்லது சிறப்புப் பெரும்பான்மையில் நிறை வேற்றி பின்னர் மாநில சட்ட மன்றங்களில் சிறப்புப் பெரும்பான்மை பெறுதல் என்ற ஏதேனும் ஒன்றின் மூலம்நமது அரசியல் சாஸனத்துக்குத் திருத்தம் கொண்டு வரலாம்.

**அரசியல் சாஸனத்தில் இடம்**

மாறிவரும் சூழ்நிலைகள் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ள இந்திய அரசியலமைப்புச் சட்டம் அதன் திருத்தத்தை வழங்குகிறது. அரசியலமைப்பு சாஸன பகுதி ஒஒ—ல் உள்ள பிரிவு 368, அரசியலமைப்பு மற்றும் அதன் நடைமுறையை திருத்துவதற்கான பாராளுமன்றத்தின் அதிகாரங்களைக் குறிக்கிறது.

**உறுதியான அமைப்பு**

உறுதியான / இறுக்கமான அமைப்பைக் கொண்ட அரசியல் சாஸனத்தைத் திருத்துவது கடினம் இந்த நடைமுறையை அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா மற்றும் சுவிட்சர்லாந்து நாடுகள் பயன்படுத்துகின்றன.

**நெகிழ்வான அமைப்பு**

நெகிழ்வான / வளைந்து கொடுக்கக் கூடிய அமைப்பைக் கொண்ட அரசியலமைப்பைத் திருத்துவது எளிது. சாதாரண சட்டத்தை இயற்றுவதன் மூலம் திருத்தம் செய்ய முடியும். இந்திய அரசியலமைப்பு சாஸனம் இறுக்கமானது மற்றும் நெகிழ்வானதும் கூட அதாவது திருத்துவது கடினம் ஆனால் நடைமுறையில் நெகிழ்வானது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 368வது பிரிவின்படி, எந்த ஒரு சபையிலும் ஒரு திருத்தத்தை அறிமுகப்படுத்தலாம், பின்னர் அது சிறப்புப் பெரும்பான்மை அல்லது தனிப் பெரும்பான்மையால் நிறைவேற்றப்படலாம். பின்னர் இந்த மசோதா பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

1950 ல் நடை முறைக்கு வந்த நமது இந்திய அரசியல் சாஸனம் 2021 வரையில் 105 முறை திருத்தப்பட்டுள்ளது.

**திருத்தத்துக்கு செய்முறை**

1. அரசியல் சாஸனத்தைத் திருத்துவதற்கான ஒரு மசோதா மக்களவை / மாநிலங்களவை போன்ற நாடாளுமன்றத்தின் எந்த அவையில் வேண்டுமானாலும் அறிமுகப்படுத்தப்படலாம்.

2. அந்த மசோதா அரசு சார்பில் கொண்டு வரப்பட்டதாக்கவோ அல்லது தனி உறுப்பினர் மூலம் கொண்டு வரப்பட்டதாகவோ இருக்கலாம்.

3. அவ்வாறு மசோதா கொண்டு வருவதற்கு குடியரசுத் தலைவரின் முன் அனுமதி தேவை இல்லை.

4. அந்த மசோதா இரண்டு அவைகளிலும். 50 அல்லது 2/3 ஸ்பெஷல் மெஜாரிட்டிக்கு மேல் அதாவது முழுமையான சிறப்புப் பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட வேண்டும்.

5. சில நேரங்களில் ஜி.எஸ்.டி.யைப் போலவே மாநில சட்டமன்றத்தில் இருந்தும் பெரும்பான்மை தேவை.

### அரசியல் சாஸன நாள்

நம்முடைய அரசியல் சட்ட நாள் நவம்பர் 26 அன்று கொண்டாடப்படுகிறது இதுவே சம்விதன் திவஸ் அல்லது தேசிய சட்ட தினம் அல்லது தேசிய அரசியலமைப்பு தினம் என்றும் அழைக்கப்படுகிறது. 26 நவம்பர் 1949 அன்று, இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, 26 ஜனவரி 1950 அன்று நடைமுறைக்கு வந்தது. அரசியலமைப்பை உருவாக்கியவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கவும், முக்கிய விழுமியங்களைப் பற்றி மக்கள் அறியவும், நவம்பர் 26 "அரசியலமைப்பு தினமாக" கொண்டாடப்படுகிறது. இந்திய அரசாங்கம் 2015 நவம்பர் 19 அன்று அரசியலமைப்பு தினமாக நவம்பர் 26ஆம் தேதியை அரசிதழின் மூலம் அறிவித்தது.

### பிற சட்டம் மற்றும் நாடுகளிலிருந்து பெறப்பட்ட அம்சங்கள்

நம்முடைய இந்திய நாட்டின் அரசியல் சாஸனம் மற்ற நாடுகளிலிருந்தும் ஒரு சில அம்சங்களைப் பார்த்து அவற்றைப் பின்பற்றியுள்ளது அதைப் பற்றி பொதுச் சட்டங்கள் நூலின் 5 ஆவது பாகத்தில் எழுதியுள்ள, " நமது அரசியல் சாஸனம் " மேலும் சில தகவல்கள் என்ற கட்டுரையில் சிறிது குறிப்பிட்டிருந்தேன் அதில் 4 நாடுகள் பற்றி மட்டும் தான் குறிப்பிட்டிருந்தேன் அதைப் பற்றி விரிவாக இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

இந்திய அரசியல் சாஸனம் கீழ்க்கண்ட சட்டம் மற்றும் இதர நாடுகளில் கூறப்பட்டுள்ள ஒரு சில அம்சங்களைப் பின் பற்றி யுள்ளது.

1. இந்திய அரசுச் சட்டம் 1935 கவர்மெண்ட் ஆஃப் இந்தியா ஆக்ட் ஆஃப் 1935 த்திலிருந்து பெறப்பட்ட அம்சங்கள்

" கூட்டாட்சித் திட்டம் ஃபெடெரல் ஸ்கீம்

" கவர்னர் அலுவலகம் ஆஃபீஸ் ஆஃப் தி கவர்னர்

" நீதித் துறை ஜுடீஷ்யரி

" பொது சேவை ஆணையங்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்ஸ்

" அவசரகால விதிகள் எமெர்ஜன்சி ப்ரொவிஷன்ஸ்

" நிர்வாக விவரங்கள் அட்மினிஸ்ட் ரேடிவ் டீடெயில்ஸ்

### நாடுகள் மற்றும் அவற்றின் பங்களிப்பு

### பிரிட்டன்

கிரேட் பிரிட்டன் இந்தியாவை 100 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்தது. கீழ்க்கண்ட அம்சங்கள் அவர்களின் அரசியலமைப்பில் இருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது

1. பாராளுமன்ற அரசாங்கம் பார்லிமெண்டரி ஃபாம் ஆஃப் கவர்மெண்ட்

2. சட்டத்தின் ஆட்சி ரூல் ஆஃப் லா

3. சட்டமன்ற நடைமுறை லெஜிஸ்லேடிவ் ப்ரொசீஜர்

4. ஒற்றை குடியுரிமை சிங்கிள் சிடிஸன்ஷிப்

5. அமைச்சரவை அமைப்பு கேபினெட் சிஸ்டம்

6. சிறப்புரிமை நீதிப் பேராணை ப்ரிராகேடிவ் ரிட்ஸ்

7. பாராளுமன்ற சிறப்புரிமைகள் பார்லிமெண்டரி ப்ரிவிலேஜஸ்

8. இருசபை பை கேமராலிசம்

### அயர்லாந்து

ஒரு சிறிய நாடு, ஆனால் இந்திய அரசியலமைப்பில் பெரிய பங்களிப்பாளர். இது பின்வரும் யோசனைகளை வழங்கியது:

1. மாநிலக் கொள்கையின் வழிகாட்டுதல் கோட்பாடுகள் டைரக்டிவ் ப்ரின்ஸ்பில்ஸ் ஆஃப் ஸ்டேட் பாலிசி

2. ராஜ்யசபாவிற்கு உறுப்பினர்கள் நியமனம் நாமினேஷன் ஆஃப் மெம்பர்ஸ் டு ராஜ்ய சபா

3. ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும் முறை மெதேடு ஆஃப் எலெக்ஷன் ஆஃப் ப்ரெசிடெண்ட்

### அமெரிக்கா

1. ஜனாதிபதியின் மீதான குற்றச்சாட்டு இம்பீஸ்மெண்ட் ஆஃப் தி ப்ரெசிடெண்ட்

2. தலைவர் மற்றும் துணைத் தலைவரின் செயல்பாடுகள் ஃபங்க்ஷன்ஸ் ஆஃப் ப்ரெசிடெண்ட் அண்ட் வைஸ் ப்ரெசிடெண்ட்

3. உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளை நீக்குதல் ரிமூவல் ஆஃப் சுப்ரீம் கோர்ட் அண்ட் ஹை கோர்ட் ஜட்ஜஸ்

4. அடிப்படை உரிமைகள் ஃபண்டமெண்டல் ரைட்ஸ்

5. நீதித்துறை ஆய்வு ஜுடீஷியல் ரெவ்யூ

6. நீதித்துறையின் சுதந்திரம் இண்டிபெண்டன்ஸ் ஆஃப் ஜுடீஷ்யரி

7. அரசியலமைப்பின் முன்னுரை ப்ரீ ஆம்பிள் ஆஃப் கான்ஸ்டிட்யூஷன்

**கனடா**

1. வலுவான மையம் கொண்ட கூட்டமைப்பு ஃபெடெரேஷன் வித் எ ஸ்ட் ராங் செண்டர்

2. எஞ்சிய அதிகாரங்களை மையத்தில் வழங்குதல் வெஸ்டிங்ஆஃப் ரெசிடியுவரி பவர்ஸின் தி சென்டர்

3. மாநில ஆளுநர்களை மத்திய அரசு நியமித்தல் அபாயிண்ட் மெண்ட் ஆஃப் ஸ்டேட் கவர்னர்ஸ் பை தி சென்டர்

4. உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனை அதிகார வரம்பு அட்வைசரி ஜூரிஸ்டிக்ஷன் ஆஃப் தி சுப்ரீம் கோர்ட்

**ஆஸ்திரேலியா**

1. மத்திய மாநிலங்களுக்குப் பொதுவான பட்டியல் கன்கரண்ட் லிஸ்ட்

2. வர்த்தக சுதந்திரம் ஃப்ரீடம் ஆஃப் ட்ரேட்

3. வர்த்தகம் மற்றும் உறவு காமர்ஸ் அண்ட் இன்டர்கோர்ஸ்

4. நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டம் ஜாயிண்ட் சிட்டிங் ஆஃப் டு ஹவுசஸ் ஆஃப் பார்லிமெண்ட்

**சோவியத் அரசியலமைப்பு (USSR, இப்போது ரஷ்யா)**

1. அடிப்படை கடமைகள் ஃபண்டமெண்டல் ட்யூடீஸ்

2. முன்னுரையில் நீதியின் இலட்சியம் (சமூக, பொருளாதார மற்றும் அரசியல்).

தி ஐடியல் ஆஃப் ஜஸ்டிஸ் சோஷியல், எகனாமிக் அண்ட் பொலிடிகல் இன் தி ப்ரீ ஆம்பிள்

**பிரான்ஸ்**

1. முன்னுரையில் குடியரசின் இலட்சியங்கள் தி ஐடியல்ஸ் ஆஃப் ரிபப்ளிக் இன் தி ப்ரீ ஆம்பிள்

2. முன்னுரையில் சுதந்திரத்தின் இலட்சியங்கள் தி ஐடியல்ஸ் ஆஃப் லிபர்டி இன் தி ப்ரீ ஆம்பிள்

3. முன்னுரையில் சமத்துவத்தின் இலட்சியங்கள் தி ஐடியல்ஸ் ஆஃப் ஈக்வாலிடி இன் தி ப்ரீ ஆம்பிள்

4. முன்னுரையில் சகோதரத்துவத்தின் இலட்சியங்கள் தி ஐடியல்ஸ் ஆஃப் ஃப்ரேடனிடி இன் தி ப்ரீ ஆம்பிள்

**ஜெர்மனியின் வீமர் அரசியலமைப்பு**

1. அவசரநிலையின் போது அடிப்படை உரிமைகள் இடைநிறுத்தம்சஸ்பென்ஷன் அஃப்ஃபண்டமெண்டல் ரைட்ஸ் ட்யூரிங் எமெர்ஜன்சி

**தென் ஆப்ரிக்க அரசியல் சட்டம்**

1. அரசியல் சட்டத் திருத்ததுக்கான நடை முறை ப்ரொசீஜர் ஃபார் அமெண்ட்மெண்ட் ஆஃப் கான்ஸ்டிட்யூஷன்

2. ராஜ்ய சபா உறுப்பினர்கள் தேர்தல் எலெக்ஷன் ஆஃப் மெம்பர்ஸ் ஆஃப் ராஜ்ய சபா

**ஜப்பான்**

"சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறை" என்ற கருத்து

நமது அரசியலமைப்பு மிக நீளமான எழுதப்பட்ட அரசியலமைப்பு என்பதை நாம் அறிவோம், பல்வேறு ஆதாரங்களில் இருந்து பெறப்பட்ட ஒரு காரணி அதற்கு பங்களிக்கிறது. அரசியலமைப்பு சபை பல அரசியலமைப்புகளை மதிப்பிட்டு, இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு சிறந்த முறையில் பொருந்தும் அனைத்து விதிகளையும் எடுத்து ஒரு வரைவை உருவாக்கியது.

நம்முடைய அரசியல் சாஸனம் மற்ற நாடுகளின் அரசியல் சாஸனங்களிலிருந்து எவற்றை எல்லாம் பின்பற்றி இருக்கிறது என்பது பற்றி ஓரளவு பார்த்தோம் மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட சட்டம் அல்லது வழக்கறிஞர் உதவியை நாடுவது பயனுள்ளதாக இருக்கும்

சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் கூகுள். காம், ஐக்ரன் ஜோஷ்.காம் ட்ரிஷ்டில்லாஸ்.காம் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுக்கப்பட்டது.

## சங்கப் பலகை

**பங்கு பெறுவோர் : ஆண்டாள், சித்ரா, கோமதி, கௌரி, பிரியா, வசுமதி, தீபிகா, மீனா, மீரா,**

**இடம் : நந்தனத்தில் உள்ள மீராவின் வீடு.**

மாலை 4 மணி அளவில் தோழிகள் கூடுகின்றனர்.

மீரா : வாங்க! வாங்க! நீங்க எல்லாம் எங்க வீட்டுக்கு வந்ததுலே, எனக்கு கையும் ஓடலை; காலும் ஓடலை.

ஆண்டாள் : எல்லோருக்கும் Friends முதல் தடவை வீட்டுக்கு வரும்போது அப்படித்தான் இருக்கும்.

பிரியா : ஆமாக்கா! அது சரி! நாம இப்போ என்ன ஆரம்பிக்கிறோம்?

ஆண்டாள் : இது என்ன கேள்வி? ஆவணி மாதம் என்றாலே வரிசை கட்டி நிற்கும் விசேஷங்கள் தான். ஆனால் போன மாதம் ஆடிப் பெருக்கு பற்றி பேசினோம் அல்லவா? நான் ஒரு செய்தி படித்தேன். சூல் கொண்ட பொன்னி நதியில் காதோலை, கருகமணி படைத்து விடுவதும், சித்ரான்னங்கள் நைவேத்தியம் பண்ணுவதும் அதற்காகத் தானாம்.

சித்ரா : இந்த வருஷம் காவிரி கரைபுரண்டு ஓடுவது காணவே மிகுந்த அழகாக உள்ளது. தென்மேற்கு பருவ மழை நன்கு பெய்து, மேட்டூர் அணை அதற்குள் நான்கு முறை நிரம்பிவிட்டது. விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

மீரா : ஆமாம்க்கா ! ஆவணி மாதம் பிள்ளையார் சதுர்த்தி, கிருஷ்ண ஜயந்தி, ஓணம், ஆவணி மூலம் என நாம் கொண்டாடலாம். போன ஆண்டே விலாவாரியா பார்த்து விட்டதால், இந்த வருடம் எப்போது வருதுன்னு மட்டும் சொல்லுங்க அக்கா !

ஆண்டாள் : கரெக்ட் தான்! ஆவணி மாதம் முழுவதும் சூரியன் சிம்மராசியில் சஞ்சரிப்பதால், இது மாதங்களின் அரசன் என்றழைக்கப்படுகிறது. ஆகஸ்ட் 16–ஆம் தேதி கோகுலாஷ்டமியும், 27–ஆம் தேதி விநாயகர் சதுர்த்தியும், செப்டம்பர் 5 அன்று ஓணம் பண்டிகையும் வருகிறது. செப்டம்பர் 1–ஆம் தேதி மதுரை சுந்தரேஸ்வரர் பட்டாபிஷேகம் உள்ளது.

மீனா : செப்டம்பர் 5–ஆம் தேதி ஆசிரியர் தினமும் வருகிறது. எல்லா பள்ளிகளிலும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

பிரியா : இப்பல்லாம் நம் இந்திய வீர, வீராங்கனைகள் விளையாட்டுப் போட்டிகளில் தங்கம், வெள்ளி என பதக்கங்கள் பெறுவது எவ்வளவு சந்தோஷமா இருக்கு. இருந்தாலும் நமது ஜனத்தொகைக்கு அது குறைந்த அளவே!

கோமதி :சமீபத்தில் வெளிவந்த ஒரு ஆய்வுக்கட்டுரை பழைய சோற்றை 'ஸ்ட்ராங் ஸ்டார்ச்' என குறிப்பிட்டுள்ளது. சூடாக சாதத்தைச் சாப்பிட்டதும், கார்போஹைட்ரேட் வேகமாக ரத்தத்தில் உறிஞ்சப்பட்டு, சர்க்கரையின் அளவை அதிகரிக்கும். பழைய சாதத்தில் அந்த மாவுச்சத்து கடினமாகி, ஸ்ட்ராங் ஸ்டார்ச்சாக மாறி விடுவதால் ரத்தத்தில் உறிஞ்சப்படும் தன்மை அதிலிருந்து வெளியேறும் சர்க்கரை அளவும் குறைந்து விடுவதாலும், நல்ல பாக்டீரியாக்களினாலும் உடலுக்கு நன்மை பயக்கும் என்று கூறுகிறது.

கௌரி : பிரியா ! நீ Sports பற்றி கூறினாயல்லவா? தென்கொரியாவில் நடந்த 26–வது ஆசிய தடகள சாம்பியன் ஷிப் போட்டியில் 24 பதக்கங்களைப் பெற்று இந்தியா இரண்டாவது இடம் பெற்றுள்ளது என்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

வசுமதி : மனிதர்கள் நிலவில் இறங்கி ஆய்வு மேற்கொள்ள தண்ணீரும், ஆக்ஸிஜனும் அவசியம். இவற்றை நிலவிலுள்ள தூசுகளில் இருந்து, சூரிய ஆற்றலைக் கொண்டு உற்பத்தி செய்யும் வழிமுறையை சீன விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

தீபிகா : நிலவென்றதும் நினைவுக்கு வருகிறது. இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா 20 நாட்களில் 60 ஆய்வுகள் செய்ததுடன், 1.3 கோடி கி.மீ. பயணம் செய்துள்ளார். 2025 ஜுன் 25 மதியம் 12.01 மணிக்கு 'ஆக்சியம் மிஷன் 4' திட்டத்தின் கீழ் நான்கு வீரர்கள் க்ரூவ் டிராகன் விண்கலத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குப் பயணம் புறப்பட்டு, ஜூலை 14 ஆம் தேதி மாலை 4½ மணிக்கு பூமிக்குப் புறப்பட்டனர். அவரது மனைவி கம்னா ஹுஸ்டனில் அவரை மகிழ்ச்சி பொங்க வரவேற்றார்.

சித்ரா : நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்யும் மனிதர்கள், கருவிகள் சந்திக்கும் முதல் பிரச்சனை நிலவில் உள்ள தூசு. ஆனால் இந்த தூசு துகள்கள் பூமியின் நகரங்களில் உள்ள மாசுக்காற்றை விட குறைவான ஆபத்தையே மனிதர்களுக்கு ஏற்படுத்துமென விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அது மட்டுமல்ல; இந்த நட்சத்திரங்களின் மிச்சமாக இருப்பது தூசு மேகங்களாலான நெபுலா. பூமியிலிருந்து 5500 ஒளி ஆண்டுகள் தொலைவிலிருப்பது பூனை பாத நெபுலா (Cats paw Nebuila) ஆகும்.

வசுமதி : வடபசிபிக்பெருங்கடலின்கிழக்குப்பகுதியில் ஒரு புதிய கடல் நத்தை இனத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இதற்கு பாத்திதேவியால் காவ்டாக்டைலஸ் என்று பெயரிடப்பட்டுள்ளனர்.

இது ஒளிரும் ஆற்றல் பெற்ற நத்தைகளில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

தீபிகா: கனடா நாட்டைச் சேர்ந்த டொரண்டோ பல்கலை மேற்கொண்ட ஆய்வில், இஞ்சியில் உள்ள ஃப்யூரானோடைனோன் எனும் சேர்மம் குடல் அழற்சிக்கான சிகிச்சையில் உதவும் என கண்டறியப்பட்டுள்ளது.

பிரியா : கனடாவைச் சேர்ந்த எம்.சி.ஹில் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் வைரஸ் காய்ச்சலால் ஏற்படும் நுரையீரல் நோய்களைச் சரி செய்ய பீட்டாக்களூகன் (Betaglucon) என்று காளான் உள்ளிட்ட எல்லா பூஞ்சைகளிலும் காணப்படுகின்ற ஒரு சேர்மம் உதவும் என கண்டறிந்துள்ளனர்.

மீனா : நான் பூண்டு பத்தி சொல்றேன்பா! சித்த மருத்துவத்தில் 'லசுனம்' என பெயர் கொண்ட பூண்டு, மத்திய ஆசியாவைத் தாயகமாக கொண்டது. உற்பத்தியில் சீனா முதலிடத்திலும், இந்தியா இரண்டாமிடத்திலும் உள்ளன. பூண்டை உணவில் சேர்த்துக் கொண்டதால் உணவுக் கூழ் வயிற்றில் எளிதாக கரையும். வயிற்றுப் பொருமல் நீங்கும். நோய் தொற்றை எதிர்க்கும் ஆற்றலைத் தருகிறது. இதய தொடர்பான நோய்களைத் தடுக்கும் மிகச் சிறந்த மருந்து, மேலும், தண்டு வட செயல்பாட்டிற்கும் சிறந்த மருந்தாக விளங்குகிறது. பிளேக் நோயிலிருந்து தப்பிக்க மாமருந்தாக பூண்டு பயன்பட்டது. அக்காலத்தில் இறந்த உடல்களைப் பதப்படுத்த பூண்டு எகிப்தியரால் பிரமிடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பண்டைய கிரேக்கத்தில் வாசலில் பூண்டு தொங்க விடும் பழக்கம் இருந்துள்ளது.

ஆண்டாள் : நீ இறப்பு என்று கூறியதும், எனக்கு மிகவும் பிடித்த அக்கால நடிகை B. சரோஜாதேவி பெங்களூரில் காலமாகி விட்டது நினைவுக்கு வந்துவிட்டது. கன்னடத்து பைங்கிளி, அபிநய சரஸ்வதி என்ற பட்டப்பெயர்கள் பெற்றவர். அவர் கொஞ்சி, கொஞ்சிப் பேசும் அழகிற்கும், அவரது ஒரு நடைக்கும் அந்த காலத்தில் நிறைய ரசிகர்கள் உண்டு. உங்களுக்கெல்லாம் தெரியாது; ஆனால் நிச்சயம் பழைய படங்களைப் பார்த்திருபீங்கன்னு நினைக்கிறேன்.

மீரா : ஆமாம் ! ஆமாம் ! நான் ஸ்கூல்லே படிக்கும் போது எங்கள் friends க்குள்ளே பத்மினியா? சரோஜாதேவியா? என போட்டியே நடக்கும். அவருடைய தாமரை நெஞ்சம் எனக்கு ரொம்ப பிடிச்ச படம். அவரது முதல் படம் கன்னடத்தில் மகாகவி காளிதாஸ் 1955–ல் வெளியிடப்பட்டது. பின் எம்.ஜி.ஆரின் நாடோடி மன்னனில் பின்பாதியில் கதாநாயகியாக நடித்தார். அந்த part ஐ மட்டும் கலரில் எடுத்திருந்தார். அதில்லேருந்து எம்.ஜி.ஆருக்கு பொருத்தமான ஜோடியாக அவருடன் 28 படங்கள்லே நடிச்சிருக்காரு.

பிரியா : எங்களுக்கும் அவரைப் பற்றி தெரியும். எனக்குப் பிடிச்ச படம் பாலும், பழமும். 'கன்னடத்துலே அபிநய காஞ்சனமாலா' என்ற பட்டப் பெயர் உண்டு.

வசுமதி : நான் ஹைதராபாத்தில் இருந்ததால், சில தெலுங்குப் படங்களையும் பார்த்திருக்கேன். அங்க அவருக்கு 'சல்லாப சுந்தரி' என பட்டம் வழங்கி இருக்காங்க! பத்மஸ்ரீ, பத்மபூஷன் விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. எனக்குப் பிடிச்ச படம் இருவர் உள்ளம், கல்யாணப்பரிசு. ஒரு சிறந்த நடிகையை இழந்து விட்டோம்.

அவர் ஆத்மா சாந்தி அடையட்டும்! அது சரி அடுத்த மாதம் எங்கு meet பண்றோம்?

சித்ரா : அடுத்த மாதம் 'அண்ணா' சமாதியில் சந்திப்போம் என கூறவும், அனைவரும் சம்மதித்து, மீரா அவர்கள் வழங்கிய கேசரி, பகோடா மற்றும் அருமையான காஃபியுடன் சந்திப்பு முடிந்து தோழிகள் கலைந்தனர்.

நன்றி ! வணக்கம் !

## சிரிப்பிற்கு சில

1. இன்னிக்கு பாங்க் இருக்கே! அப்புறம் ஏன் பணம் எடுக்க முடியாதுங்கறே?

   என் அக்கவுண்ட்ல பணம் இல்லையே!

2. கட்சி மேலிடம் எதுக்கு அவசரமா கட்சித்தொண்டர்கள் எல்லாரையும் வரச் சொல்லி இருக்காங்க?

   மின்வாக்கு எந்திரத்தில் எப்படி கள்ளஓட்டு போடறதுன்னு பயிற்சி கொடுக்கத்தான்!

3. என்னங்க! செயின் கம்பெனில வேலை செய்யறதா சொல்றீங்க, ஒரு செயின் எடுத்துகிட்டு வந்து நம்ம பெண் கழுத்துல போடக்கூடாதா?

   அடியே! நான் வேலை செய்யறது சைக்கிள் செயின் தயாரிக்கும் கம்பெனி.

4. இந்த ஏரியாவுல இருக்கிறவங்க மட்டும் பிரமாதமா டென்னிஸ் விளையாடறாங்களே?

   கொசுத் தொல்லை அதிகம் உள்ள ஏரியா ஆச்சே. கொசு அடிக்கிற பேட்டைப் பயன்படுத்தி, பயன்படுத்தி எல்லாரும் நல்லா விளையாட ஆரம்பிச்சுட்டாங்க..

## போக்குவரத்து கழகங்கள் பற்றி அறிந்து கொள்வோம்.

தமிழகத்தில் பொதுமக்களின் அன்றாட போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்திடும் போக்குவரத்து கழகங்களைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

தோற்றம் : போக்குவரத்துக் கழகங்கள் உருவாகும் முன்பு தமிழ்நாடு போக்குவரத்துத் துறை மூலம் பேருந்துகள் இயக்கப்பட்டன. பின்னர் (1972–ல் தமிழகத்தில் இயங்கிய தனியார் பேருந்துகளில் குறிப்பிட்ட சதவிகித பேருந்துகளை நாட்டுடைமையாக்கி தமிழக போக்குவரத்துக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இது ஒரு தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனமாகும். மேலும், கம்பெனி சட்டத்தின்படி நிர்வாகம் செய்யப்படுகிறது.

போக்குவரத்து கழகங்கள் தமிழகத்தில் 8 போக்குவரத்து கோட்டங்கள், 24 மண்டலங்களாக உள்ளன.

### உள் கட்டமைப்பு :

தமிழகத்தில் போக்குவரத்துக் கழகங்களில் மொத்தமாக 22,000 பேருந்துகள் உள்ளன. இதில் 1.20 லட்சம் பணியாளர்கள் பணிபுரிகின்றார்கள். ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் தலைமை அலுவலகம், பணிமனைகள், மத்திய பண்டகம், புதுப்பிக்கும் பிரிவு (FC யூனிட்), RC Unit, BB unit மேலும், தலைமை அலுவலகத்தில் 20 பிரிவுகள் உள்ளன.

### வேலை வாய்ப்பு :

இது ஒரு அரசு சார்பு நிறுவனம் என்பதால் இதில் ஏற்படும் காலிப்பணியிடங்கள் அனைத்தும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாகவே நிரப்பப்படுகின்றன. ஓட்டுநர், நடத்துனர், 10–ம் வகுப்பு பாஸ் செய்திருக்க வேண்டும். ஓட்டுநர்கள் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும். நடத்துனர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நடத்துனருக்கான பேட்ஜ் பெற்றிருக்க வேண்டும். இளநிலை கைவினைஞர் (மெக்கானிக்) அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்தில் ITI பாஸ் செய்திருக்க வேண்டும். இளநிலை உதவியாளர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலை கழகத்தில் பட்டப்படிப்பு Drgree பாஸ் செய்திருக்க வேண்டும். AE / JE –க்கு பொறியியல் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

### பொது மக்களுக்கு போக்குவரத்து கழகங்கள் செய்திடும் சேவைகள் :–

பனி, மழை, புயல், வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர் காலத்திலும் பொது மக்களின் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்கின்றன. மேலும், லாரிகள் ஸ்ட்ரைக்கின் போதும் காய்கறிகள், பால் மற்றும் இதர பொருட்களையும் ஏற்றி செல்கின்றன. உழவர் சந்தைகளுக்கு அன்றாடம் காய்கனிகள் ஏற்றி செல்கின்றன. மேலும், அரசின் பல்வேறு விதமான அனைத்து இலவச பாஸ் பயணங்களை அனுமதித்து பொது மக்களை அழைத்து செல்கின்றன. மேலும், ஒப்பந்த ஊர்திகளாகவும் பொது மக்களுக்கு பயன்படுகின்றன.

### பேருந்து பயணங்களில் பொது மக்கள் கவனிக்க வேண்டியவைகள் :–

பொது மக்கள் பேருந்து பயணங்களில் பேருந்தில் ஏறும் முன் பேருந்து பதிவு எண், மற்றும் பேருந்தின் முன் இடது புறம் மற்றும் பக்க வாட்டில் வட்டமாக ஒரு ஸ்டிக்கர் ஒட்டியிருப்பார்கள் அதையும் கவனிக்க வேண்டும். கவனிக்க தவறுபவர்கள் பேருந்து நிற்கும் இடங்களிலாவது பார்த்து கவனிக்க வேண்டும். பேருந்தின் முன் மற்றும் பக்க வாட்டில் உள்ள வட்டமான ஸ்டிக்கரில் மூன்று ஆங்கில மற்றும் தமிழ் எழுத்துக்கள் இருக்கும் உதாரணமாக

TRY-PBRஎன இருந்தால் TRY என்றால் திருச்சி மண்டலம் என்றும் PBR என்றால் பெரம்பலூர் கிளை என்றும் பொருள்.

KPM/TBM காஞ்சிபுரம் மண்டலம் தாம்பரம் கிளை என பொருள்

CDL/CDM கடலூர் மண்டலம் சிதம்பரம் கிளை என பொருள்

பேருந்து பதிவு எண். பக்கவாட்டில் உள்ள ஸ்டிக்கரை மொபைலில் போட்டோ எடுத்துக் கொள்ளலாம். இவைகளை ஏன் கவனிக்க வேண்டும் என்றால் நமது பயணத்தின் முடிவில் நாம் ஞாபக மறதியாக பேக் மற்றும் உடமைகள், கல்வி சான்றுகள் ஆகியவற்றை பேருந்தில் விட்டு விட்டு இறங்கி விட்டாலும் உடனடியாக பதிவு எண், பக்கவாட்டு ஸ்டிக்கரை வைத்து தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். அனைத்து பேருந்துகளின் உள்புறம் கிளையின் தொலைபேசி எண்கள் எழுதப்பட்டிருக்கும் இவை எல்லாம் நாம் இழந்த

உடமைகளை திரும்ப பெற பேருதவியாக இருக்கும்.

**பயணிகளால் தவறவிடப்பட்ட பொருட்கள் :- Unclaimed Articles**

பயணிகளால் பேருந்துகளில் தவறவிடப்பட்ட பொருட்கள் பேருந்தில் பயணித்தவர்கள் யாரும் எடுத்துச் செல்லாமல் இருந்து பேருந்து பணிமனைக்கு டிரிப் முடித்து செல்லும்போது நடத்துனரால் கண்டெடுக்கப்பட்டாலும் (அல்லது) பாதுகாவலரால் கண்டெடுக்கப்பட்டாலும் அந்த பொருளின் விபரங்கள் எழுதப்பட்டு கிளை பண்டகத்தில் ஒப்படைக்கப்படும். பயணிகள் உடமைகளை தேடி பணிமனைக்கு சென்று பயண டிக்கட் (அ) தவறவிடப்பட்ட பொருட்களின் விபரங்கள் மற்றும் அடையாளங்களை தெரிவித்து அவற்றை திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.

இதில் தங்க நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்கள் தவறவிடப்பட்டு கண்டெடுக்கப்பட்டு கிளையில் ஒப்படைக்கப்பட்டால் அவை தலைமை அலுவலகம் அனுப்பி வைக்கப்படும். பயணிகள் தலைமை அலுவலகம் சென்று தங்க நகை விபரங்கள் அடையாளங்கள், பயண டிக்கட் மற்றும் நோட்டரி பப்ளிக் சான்று பெற்று கொடுத்து மேற்கண்ட தங்க நகைகளை திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.

நன்றி, வணக்கம் !

- D. குமார், B.Sc, MA, BLIS,
Supdt (Rtd) MTC (Chennai) Limited.
9443954647

---

## ஜப்பானில் நான்

(தொடர்ச்சி)

ஓசாகாவில் முதலில் நாங்கள் சென்றது அக்வேரியம். மீன் தொட்டியில் மீனை விளையாட விட்டு நமக்கு காண்பிக்கவில்லை. இயற்கையாகவே மலைகளைக் குடைந்து அதில் நீர் விட்டு மீன்களை விட்டுள்ளார்கள். உலகில் எத்தனை வகை மீன்கள் இருக்கிறதோ, அத்தனை வகை மீன்களையும் காண முடிகிறது.மக்கள் கூட்டத்தைப்பார்த்தவுடன் அவைகள் அடைந்த உற்சாகமும் காணக் கண்கொள்ளா காட்சி! நட்சத்திர மீன், பென்குயின் என அனைத்தையும் கண்டு ரசித்தோம்.

அடுத்து நாங்கள் சென்றது Osaka Castle. ஓசாகாவின் அரண்மனை! ஒரு நினைவுச் சின்னமாக ஒரு மன்னரால் எழுப்பப்பட்ட 5 மாடிகள் கொண்ட இந்த அரண்மனை, பின்னாளில் போர் சாதனங்களைக் காக்கும் அரண்மனை ஆகியது. கோட்டை வெளியே பெரிய மதில் சுவர்; அதைச் சுற்றி ஒரு பெரிய அகழி. நம் தஞ்சைக் கோட்டையை நினைவூட்டியது என்பது உண்மையே! அடுத்து பார்த்தது Ume da Sky Building. 350 மீட்டர் உயரம் கொண்ட கட்டிடம். மேலே ஏறிப் பார்த்தால், முழு ஓசாகா நகரமே நம் கண் முன்னால்; மேல் தளம் வரை செல்ல அனுமதி உண்டு. அங்கே காதலர் பூங்கா என ஓர் இடம் ஒதுக்கி உள்ளார்கள். அங்கே காதலர்கள் இதய வடிவில் பூட்டு வாங்கி தொங்க விடுகிறார்கள்; தங்களின் காதல் நிறைவேற...

மே 21–ஆம் தேதி காலை முதல் மாலை வரை கடைகளைச் சுற்றினோம். அங்கு விலை மிகவும் அதிகம்.இருப்பினும்சில பரிசுப் பொருட்களை வாங்கிய பின், இரவு விமான நிலையம் அடைந்து ஓசாகா–சிங்கப்பூர்–சென்னை நலமாக வந்தடைந்தோம்.

**ஜப்பானின் சிறப்புகள் :**

1) தன் வேலையைத் தானே செய்கிறார்கள். வேலைக்கு ஆட்கள் வைத்து கொள்வதில்லை. நாங்கள் உணவு உட்கொண்ட இந்திய உணவு விடுதிகளில் கூட, அந்த முதலாளியே எல்லா வேலைகளையும் செய்தார்.

2)பசுமை நிறைந்த சுத்தமான தீவு! குப்பையைக் காண முடியவில்லை. நம் நாட்டிற்கு என்று அது போன்ற ஒரு தினம் வருமென மனது ஏங்கியது எனில் அது மிகையல்ல. ஜப்பானில் ஜனத்தொகை குறைந்து கொண்டே வருகிறதாம். அதுவும் ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம். வெளிநாட்டில் குப்பை போடாத நம் இந்திய மக்கள், இந்தியாவிற்கு வந்ததும் குப்பை போடுவதுதான் புரியாத புதிராக உள்ளது.

3)‘செர்ரி பிளாசம்’ பூ ஜப்பானின் ஸ்பெஷல், ஆனல் அது மார்ச் மாதம் பூத்து முடிந்து விடுமாம். அதனால் எங்களால் அப்பூக்களைக் காண இயலவில்லை.

4) இங்கு காக்கைகளைப் பார்த்தோம். ஆனால் அது ‘கா, கா’ என்று கத்தவில்லை. ஒரு வேளை ஜப்பான் மொழியில் கத்தியதோ!!!

என்னுடன் இணைந்து பயணித்த கார்காத்தார் ஒப்புரவின் வாசகர்களுக்கு என் மனமார்ந்த வணக்கமும் ! நன்றியும் !

– திருமதி. கலா ஞானசம்பந்தன்.

# KBF Biz-Connect KARKATHAR BUSINESS FORUM

(கார்காத்தார் தொழில் முனைவோர் பேரவை)

Chief Guest : Arvind Maharajan - Founder Cimplify.AI, Zubcon - leading AI Solution Platforms in India

TOPIC : AI FOR OUR BUSINESS

Monthly meeting - ANDHRA CHAMBER OF COMMERCE- CHENNAI on Saturday 26/07/25





KANNAN



RAGURAM



GEETHALAKSHMI



GURUPARTHAVAN



SWAMINATHAN



SENTHILNATHAN



MANOHAR



MUTHUSANKAR



PRIYADARSHINI



SELVARASU



RAJA SEKARAN



ARUNACHALAM



M.ARUMUGAM



KUMARESAN



SRIDHAR



N.SUDHAKAR



RAJ MOHAN



PANNEERSELVAM



DR.ASOKAN



SARAVANAN



PONNAMBALAM



THARANI



ANAND



MURUGESH



SAVON

**President**
M.Balamurugan

**Secretary**
N.Ponnambalam

**Treasurer**
V.Kannan

## விட்டலனின் பரம பக்தர் - ஸ்ரீ பக்த புரந்தரதாஸர்.

### பகுதி I.

கார்முகில் வண்ணனான ஸ்ரீ நாராயணன், நாரதரிடம் பூலோகத்தில் பிறந்து நாம சங்கீர்த்தனத்தால் பக்தர்களுக்கு நன்மார்க்கத்தைப் போதிக்கும்படி திருவாய் மலர்ந்தருளினார். நாரதரும் பண்டரிபுரத்திற்கு அருகில் உள்ள வேமன்னபுரி என்ற சிற்றூரில், ஒரு அடியாரின் மகனாகத் தோன்றினார். அவருக்கு ரகுநாதன் என நாமகரணம் சூட்டப்பட்டது. மழலைப் பருவத்திலேயே இசையில் நல்ல புலமை உள்ளவனாகத் திகழ்ந்தான். வாலிப வயதில் வட்டிக்கடை வியாபாரத்தில் ஈடுபட எண்ணங் கொண்டான். தந்தை மிகப் பெரிய லேவாதேவிக் கடை வைத்துக் கொடுத்தார். பிஞ்சு வயதில் நெஞ்சு நெகிழும் வண்ணம் நாம சங்கீர்த்தனம் செய்த ரகுநாதன், வாலிப வயதில் பணத்திற்கு அடிமையானான். ஒரு நன்னாளில் ரகுநாதனின் கரம் பிடித்தாள் லட்சுமிபாய் எனும் அழகிய நங்கை. இல்லறத்தில் இன்புற்று வாழ்ந்த ரகுநாதன் வியாபாரத்திலும் கொடிகட்டிப் பறந்தான். செல்வம் சேரச் சேர குணமும் மாறத் தொடங்கியது. அவன் மனம் சுருங்கியது; பக்தி குறைந்தது; பாவம் பெருகியது; ஆசை பேராசையானது.

நல்லவர் என்று பெயர் பெற்ற மாதவராஜின் மகன் கஞ்சன், கொடுமைக்காரன், ஈவு இரக்கம் அற்றவன் என்ற பெயர்களைப் பெற்றான். அவனது போக்கைக் கண்டு பெற்றோரும், மனைவியும் துயருற்றனர். கலியுகத்தில் பக்தியைப் பரப்ப அனுப்பப்பட்டவர், பணம் எனும் படுகுழியில் விழுந்து கிடந்தார். அவனைக் கரையேற்றி ஆட்கொண்டருளத் திருவுள்ளம் கொண்ட ஸ்ரீ மந் நாராயணன் வயது முதிர்ந்த அந்தனனாக, ரகுநாதனின் வீட்டிற்கு வந்து, அவரது மகனுக்குத் திருமணம் செய்து வைக்க யாசகம் கேட்கிறார். ரகுநாதனோ கோபம் கொண்டு அந்த முதியவரை பிடித்துக் கீழே தள்ள, பெரியவர் கீழே விழுவது போல பாசாங்கு செய்து ரகுநாதனைக் கட்டிப் பிடிக்கிறார். ரகுநாதன் அவர் பிடியிலிருந்து தப்பி கடைக்குச் சென்று விட, பெரியவரோ வீட்டிற்குள் நுழைந்து லட்சுமிபாயிடம் யாசிக்கிறார். அவளோ தனது வைர மூக்குத்தியைக் கழற்றி, இது 3,000 பொன் பெறும். அதை வைத்து உங்கள் மகனின் திருமணத்தை சிறப்பாக நடத்திக் கொள்ளுங்கள் எனக் கூறி அவரை வழியனுப்புகிறாள். அங்கு கடைத்தெருவில் நவரத்தின மணிமாலைகள் கழுத்தில் புரள, ஒரு வைர வியாபாரி வட்டிக்கடையை நோக்கி வருகிறார். ரகுநாதன் அவரை வணங்கி வரவேற்று, என்ன வேண்டுமென வினவ, வைர வியாபாரி இந்த ஊரில் உங்கள் லேவாதேவிக் கடை மிகவும் பிரபலமானது என்று கேள்விப்பட்டேன். என்னிடம் ஒரு உயர்ந்த மூக்குத்தி உள்ளது. அதற்கு பணம் பெற்றுப்போகவே வந்தேன் என்று மூக்குத்தியைக் கொடுக்க, அதைக் கையில் வாங்கிய ரகுநாதன் திகைக்கிறான். அது தன்னுடைய மனைவியின் மூக்குத்திப் போலவே இருக்க, அவனுக்கு சந்தேகம் வருகிறது. வந்திருப்பவரோ ஒரு வைர வியாபாரி. அவர் 3000 பொன் கேட்க, ரகுநாதனோ, ஆயிரம் பொன்தான் தருவேன் என பேரம் பேசவும், வியாபாரி உடனே ஒத்துக் கொண்டு ஆயிரம் பொன்னை உடனே தருமாறு கோருகிறார். அதனால் இன்னும் சந்தேகம் பலப்பட, அவர் வீட்டிற்கு சென்று பொன் கொண்டு வருகிறேன் என்று தன் இல்லம் வருகிறார்.


லட்சுமியைக் கூப்பிட்டு மூக்குத்தி எங்கே எனக் கேட்க, அவளோ பூஜை அறையில் உள்ளதெனக் கூறி, உள்ளே சென்று பாண்டுரங்கனை மனம் உருகி பிரார்த்திக்க, அவள் கரங்களில் ஒரு ஒளி வீசும் மூக்குத்தி வருகிறது. அதைக் கொண்டு வந்து கணவனிடம் தர, அவனோ அது போன்ற ஒரு விலை மதிப்பிட முடியாத அதி அற்புதமான மூக்குத்தியை அது வரை கண்டதில்லை. அதனால் இது நான் வாங்கி தந்ததன்று; இது எப்படி வந்தது? என வினவவும், லட்சுமி உண்மையைக்கூற, ரகுநாதனுக்கு வயோதிகனாக வந்ததும், வைர வியாபாரியாக வந்ததும் பாண்டுரங்கனே! என்ற உண்மை உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்குகிறது. உடனே கடைக்கு வந்தான். அங்கே வைர வியாபாரி இல்லை; மூக்குத்தி மட்டும் தான் இருந்தது. வட்டிக்கடையில் வண்ண ஜோதிப் பிரகாசம்! துளசியின் சுகந்த பரிமள வாசனையின் தெய்வீக மணம்! பணம் பணமென ஆலாய்ப் பறந்தவன் அனந்தனின் திருவடியில் தஞ்சமானான். அவனது குணம் மாறி, ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கலானான். ரகுநாதன் என்ற வியாபாரி ஸ்ரீ ரகுநாதர் என்ற பெருமாள் தாசனார்.

– தொடரும்.





# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**
அலைபேசி: 94437 00375
Email: thiagu1943@gmail.com

## எண்ணமே முன்னேற்றத்தின் ஆணிவேர்!

எண்ணமே முன்னேற்றத்தின் ஆணிவேர். மக்களின் எண்ணத் தொகுதிதான் ஒரு நாட்டின் வளர்ச்சியாக முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறது. ஒரு நாடு முன்னேறுகிறதா பின்னேறுகிறதா. என்பது அந்த நாட்டின் பல்வேறு துறைத் தலைவர்களையும் மக்களையும் பொறுத்தது. இங்கே நல்லவர்கள் இருக்கிறார்களா? சுயநலக் காரர்கள் இருக்கிறார்களா ? என்பதைப் பொறுத்தது. ரோமராஜ்யம் அழியுமுன். அது குடி போதையிலும் இன்பப் போதையிலும் காலங் கழித்ததைப் பற்றிச் சரித்திராசிரியர்கள் எழுது கிறார்கள். அசோக சாம்ராஜ்யத்தின் முக்கியத் துவத்தை அங்கே அன்று நிலவிய எண்ணங்கள் மூலம் இன்று நாம் உணர்கிறோம்.நமது நாடு மகத்தான தலைவர்களை வழங்கியிருக்கிறது. அன்னை தெரசா. காந்தி.நேரு.பாரதி..வல்லபாய் படேல். டாக்டர். அம்பேத்கார். அண்ணா. காமராஜர். டாக்டர். அப்துல் கலாம். இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்....இவர்கள் வழங்கிய எண்ணங்கள் எல்லாம் புனிதமானவை. உயர்ந்தவை. உண்மை. நேர்மை. வீரம். இனிமை எல்லாம் மகத்தான எண்ணங்கள். நாம் இதை நினைவில் கொள்ளவேண்டும். புத்தரின் எண்ணங்களால் சரித்திரம் எப்படி மாறியது? ஆபிரகாம் லிங்கன். காந்தி என்று இவர்களெல்லாம் எப்படிச் சில எண்ணங்களுடன் வந்து. உலகின் சரித்திரத்தை மாற்றி அமைத்தார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். திடமான எண்ணங்களை கொள்ளுங்கள். உற்சாகம். ஊக்கம் என்னும் ஒளியைத் தூண்டிவிடுங்கள். நம்பிக்கை விடிவெள்ளியாய் சுடர் விடட்டும் அது உங்களை லட்சியப்பாதையில் கொண்டு சேர்க்கும்.

## ஆகஸ்ட் 07 உலக நட்பு தினம்.

ஒரு நண்பனைப் பெறுவதற்கு நீ ஒரு நல்ல நண்பனாய் இருப்பது ஒன்றே வழி.
நட்பு நீ தேர்ந்தெடுக்கும் பொருள் கூட,உன் குணத்தை காட்டும்.
ஆனால் நீ தேர்ந்தெடுக்கும் நட்போ ,உன்னையே காட்டும்.
பரிசுகளைக்கொடுத்து நீ உன் நண்பர்களை வாங்கினால் நீ
பரிசு கொடுப்பது நின்றால் அவர்கள் நட்பும் நின்றுவிடும்.
நட்பைக் கொடுத்துதான் நட்பைப் பெறமுடியும்.
இன்பத்தை இரட்டித்து துன்பத்தை பாதியாகக் குறைப்பது நட்பு.
நீ உன் நண்பனைச் சொல் நான் உன்னை யார் என்று சொல்கிறேன்.
நட்பு கொள்வதில் நிதானமாக இருங்கள்.ஆனால் நட்பு கொண்டபின் அதில் உறுதியாகவும் நிலையாகவும் நில்லுங்கள்.



**வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.**

வினைகெடல் என்றால் எதையும் செய்யாதிருத்தல்.எதையும் செய்யாமல் இருப்பதையே ஒருவர் விரும்புவாரானால் அது பெரிய குறைபாடு. அதனால் செயலையே ஒருவர் கை விடுவாரானால் ,அவரையே உலகம் கைவிட்டுவிடும்.




## அதிக மதிப்பெண்கள் பெற நீங்கள் செய்யவேண்டியவை !

இன்றைய காலகட்டத்தில் பாடத்தில் அதிக மதிப்பெண் வாங்குவதைப் பொறுத்தே உங்கள் அறிவுத்திறன் கணிக்கப்படுகிறது.இதற்கு நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இவைதான்

1. பள்ளி துவங்கிய முதல் நாளிலிருந்தே படிக்கத் துவங்குங்கள்.
2. பள்ளிச் செல்வதில் ஒருநாள்கூட தவறுதல் கூடாது.
3. வகுப்பில் உங்கள் முழு கவனமும் இருத்தல் வேண்டும்.
4, பாடம் நடத்துதற்கு முன்பாகவும் பாடம் நடத்தியபின்பாகவும் அப்பாடத்தினை படித்துப்பாருங்கள்.
5. தினமும் படிக்கும் பழக்கத்தைக் கைவிடாதீர்கள்.
6. ஆசிரியரோடு நல்ல தொடர்பு வைத்திருங்கள்.பாடம்தொடர்பான சந்தேகங்களை அவ்வப்போது வகுப்பிலேயே கேட்டுத் தெளிவுபெறுங்கள்.
7. எந்தப் பாடத்தினையும் புரிந்துகொள்வதற்கு முன்பாக மனப்பாடம் செய்யாதீர்கள்.
8. ஒரு முறை படித்துவிட்டு இரண்டுமுறை எழுதிப் பாருங்கள்.எழுதிக்கொண்டே படம் வரைந்து கொண்டே படிப்பதால் கவனச்சிதறல் ஏற்படாது.
9. அன்றாடம் படித்த பாடத்தினை குறிப்பெழுதி சொல்லிப்பாருங்கள்.
10. வகுப்பில் ஆசிரியர் எது முக்கியம் என்று சொல்கிறார்களோ அவற்றை நன்கு குறியிட்டு வைத்துக் கொள்ளுங்கள்.
11. நீங்களாகவே ஓர் கால அட்டவணையைத் தயார் செய்துகொள்ளுங்கள்.
12. படித்தப்பாடங்களை அடிக்கடித் திரும்பப் படியுங்கள்.
13. பாடங்கள் புரியவில்லையெனில் அடுத்தவரின் உதவியைக் கேட்க வெட்கப்படாதீர்கள்.
14. நீங்களாக ஓர் வினாவங்கி தயார்செய்து கொள்ளுங்கள்.
15. பாடப்புத்தகத்திலுள்ளள கேள்விகளுக்கு விடைகாணுங்கள்.
16. உங்களுக்கு நீங்களே தேர்வுவைத்துக் கொள்ளுங்கள்.
17. எந்தப் பாடத்தில் உங்கள் மதிப்பெண்கள் குறைவாக உள்ளதோ அந்தப்பாடத்திற்கு அதிக முக்கியத்துவம் தந்து பாடத்தை நன்கு புரிந்துகொள்ளுங்கள்.
18. வகுப்பில் ஆசிரியர் வைக்கும் ஒவ்வொரு தேர்வினையும் பள்ளி இறுதித் தேர்வாகவே கருதுங்கள்.
19. குறைந்தது 5 அல்லது 6 ஆண்டு கேள்வித்தாள்களை சேகரித்து விடைகளை தயார்செய்து கொள்ளுங்கள்.

---




1. கொடுக்க முடியும்.ஆனால் எடுக்க முடியாது.அது என்ன ?
2. ஊர் முழுக்க ஒரே பந்தல்.அது என்ன ?
3. அனலில் பிறந்தவன் ஆகாசத்தில் பறக்கிறான் அது என்ன ?
4. தலைக்குக் குடை, காலில் முள்.அது என்ன ?
5. அள்ள அள்ளக் குறையாது.குடிப்பதற்கு உதவாது.அது என்ன ?
6. ஒற்றைக்கால் சுப்பனுக்கு தலைக்கணம் அதிகம்.அவன் யார் ?
7. இருட்டில் கண் சிமிட்டும் நட்சத்திரம் அல்ல அது என்ன ?
8. ஓங்கி வளர்ந்தவள் ஒரு பிள்ளை மட்டுமே பெற்றவள்.அவள் யார் ?
9. கூடவே வருவான் ஆனால் உன்னுடன் பேசமாட்டான்.அவன்யார் ?
10. கை பட்டதும் சிணுங்குவான்,கதவு திறந்தால் அடங்குவான்.அது என்ன ?

---

## மெண்டல் பிளாக்

அனைவருக்குமே இந்த மெண்டல் பிளாக் இருக்கும்.காரணம் மட்டும் வேறுபடக்கூடும். அதாவது ஒரு செயலுக்கான அடிப்படை முயற்சி ஏதும் மேற்கொள்ளாது ,என்னால் இது முடியாது என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கும் பழக்கம்தான் இது.நான்காம் வகுப்புக் கணக்கைக் கொடுத்தால்கூட ஐயோ....கணக்குல நான் ரொம்ப வீக் ! என்று படித்துப் பட்டம் பெற்றவர்களே அந்த இடத்தைவிட்டு ஓடிவிடுவார்கள். பொதுவாக நம்மில் பலர் நூறு ரூபாய்க்கு அதிகமாக இருந்தால்,அந்தபொருளை வாங்க பின்வாங்குவோம்.இந்த மனவியல் தெரிந்துதான் சிலர்(பாட்டா போன்ற நிறுவனங்கள்) தங்கள் பொருட்களுக்கு 99 அல்லத 999 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்கிறார்கள்.

**சிரிக்கலாம் வாங்க!**

1. இந்த முகத்தை எங்கோ பார்த்த மாதிரி இருக்கே ?
   இருக்காதுங்களே ! நான் பிறந்ததுலே இருந்து இது என் கழுத்துலே தானே இருக்கு !
2. உங்க பையன் தினமும் டிவி பார்ப்பானோ ? ஏன்சார் ?
   வகுப்புல எந்தக் கேள்வி கேட்டாலும் பதில் சில நிமிடங்களில் அப்படீன்னு சொல்றான்.
3. தலைவர் ஏன் திடீர்ன்னு சட்டத்தை அடியோட மாத்தனும்னு சொல்றார் ?
   அவர் வீட்டில எல்லா சட்டத்தையும் கரையான் அரிச்சுட்டுதாம்
4. என்னையா,இன்ஸ்பெக்டர் அரிவாளோட வர்ரார் ?
   அவர் துப்பாக்கி திருட்டு பொயிடுச்சாம்.
5. சிஸ்டர் எனக்கு எவ்வளவு நேரம் ஆபரேஷன் நடக்கும் ?
   அது நீங்க ஆஸ்பத்திரிக்குக் கட்டற பணத்தைப் பொறுத்தது.
6. நீ யாருன்னு எனக்கு முன்ன பின்ன கூட தெரியாது ! எப்படியப்பா என்கிட்ட கடன் கேட்பே ?
   என்ன பண்ணறது ? தெரிஞ்சவங்க யாரும் எனக்குக் கடன் கொடுக்கமாட்டேங்கிறாங்களே !
7. சே..ஏன் தான் எனக்குப் பிச்சைன்னு பேர் வெச்சாங்களோ .அசிங்கமான பேர் !
   அதனால என்னப்பா...இனிஷியலோட சேர்த்துப் பேரைச் சொல்லிடு...பிரச்சனை இருக்காது !
   இது அதைவிட மோசம்..எங்கப்பா பேர் ராமசாமி!
8 ரௌடி வீட்ல பொண்ணு கட்டனது தப்பாப்போச்சு. ஏன் ?
   பொண்ணுக்கு சைக்கிள் செயினைப் போட்டுவிட்டிருக்காங்க.
9. என்ன இது ? ரேஷன் கார்டுல நம்ம தொகுதி எம்.எல்.ஏ பேரை சேத்திருக்கீங்க ?
   ஒட்டுக்கேட்க வந்தப்ப நான் உங்கள் வீட்டுப்புள்ளைன்னு அவர்தாங்க சொன்னாரு !
10. இவ்வளவு தொந்தி இருக்கே ! திருடனை எப்படித் துரத்திப் பிடிக்க முடியும் ?
    எதுக்குத் துரத்தணும் ? அவங்களே கரெக்டா மாமூலைக் கொண்டவந்து கொடுத்துடுவாங்க !

**பார்வையற்றவர் யார்?**

மதுகுடித்தவன் ஒருவன் பாட்டிலை வழியில் போட்டு உடைத்துவிட்டுச் சென்று விடுகிறான். பார்வையுள்ள ஓர் ஆன்மீகவாதி பார்க்கிறார் கடவுளுக்கு அடுக்குமா ? கேட்பார், யாருமில்லையா ? எனக் கேட்டுவிட்டு தன்காலில் படாது ஒதுங்கிச் சென்று விடுகின்றார். பொதுப்பணிச் செய்பவர் ஒருவர் பார்க்கிறார் கண்ணாடி இப்படிக் கிடந்தால் வருவோர் செல்வோர் காலில் குத்திவிடும்.இதனை நான் உரிய அரசு அலுவலகத்திற்கு மனுபோடப் போகிறேன் என்று கூறி வேகமாகச் சென்றுவிடுகின்றார்.அரசியல் வாதி இதனை பார்க்க நேரிடுகிறது. பார்த்தவர் இது எதிர்க்கட்சியினரின் சதிவேலை நான் இதனை எதிர்த்து போராட்டம் நடத்தப் போகிறேன் என்று கூறி இடத்தைவிட்டு நகர்ந்தார்.பார்வையற்ற இளைஞர் ஒருவர் அவ்வழியே வருகிறார்.அவர் தான் பயன்படுத்தும் கைச்குச்சியினால் உணர்கிறார்.

உணர்ந்தவர் குனிந்து தடவித்தடவி கண்ணாடித் துண்டுகளை பொறுக்கினார்.அருகமைந்த குப்பைத் தொட்டி இருக்குமிடம் கேட்டறிந்து அதில் போட்டுவிட்டுச் செல்கிறார்.இதில் யார் பார்வையற்றவர் ? கூறுங்களேன் !

---

**கணிதப்புதிர்:** 1.மைல்களைக் கிலோ மீட்டராக மாற்றிக் கணக்கிட என்ன செய்யவேண்டும் ?


2. ஐந்து ரூபாய்க்கு ஆறு பழங்கள் வாங்கி ஆறு ரூபாய்க்கு விற்றால் லாபம் எத்தனை சதவிகிதம் ?

3.ஒருவன் மூன்று நாட்களில் 45 கி.மீட்டர் நடக்கிறான் அவன் 75 கி.மீட்டர் நடக்க எத்தனை நாட்கள் ஆகும் ?

**இவை தெரியுமா?**

1. கருப்பையில் குழந்தை உருவாகும்போது அதன் இதயம்தான் முதலில் வளர்கிறது.
2. மருத்துவர்கள் ஒரே ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் ஊசிக்கு சோலோ ஷாட் என்று பெயர்.
3. மாரடைப்பால் நின்றுபோன இதயத்தை மீண்டும் இயக்க உதவும் கருவி மார்க்விட் ரெஸ்பாண்டர்.
4. ஒரு நபருக்கு தினமும் 2.5 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது.சராசரியாக வாழ்நாளில் 60,600 லிட்டர் தேவைப்படுகிறது
5. ஐந்து விரல்களும் ஒரே அளவாக இருப்பதில்லை என்பது வழக்குச்சொல்.ஐந்து விரல்களின் நகங்கள்கூட ஒரே மாதிரியாக வளர்வதில்லை.கையின் நடுவிரல் நகம் மற்றவற்றைவிட வேகமாக வளர்கிறது. கட்டைவிரல் நகமோ நிதானமாக வளர்கிறது .
6. மனிதனின் கண்கள் 17 ஆயிரம் வகையான நிறங்களை பிரித்துணர முடியும்.

**இந்த பிடிவாதம் நமக்கு வேண்டும்**



கங்கையில் நீராடிக்கொண்டிருந்த துறவி ஒருவர் வெள்ளத்தில் தேள் ஒன்று தத்தளிப்தைப்பார்த்து வருந்தி அதனைத் தனது விரல்களால் தூக்கினார். தேள் அவரது கையில் கொட்டிவிட்டது. வலி தாங்காது தேளை உதறி விட்டார் ஆற்றினுள்ளாகவே விழுந்துவிட்டது. இரக்கமனம் கொண்ட அவர் மீண்டும் அத்தேளை எடுக்க பலமுறை முயற்சித்தார். கடைசி முறையாக வலியைப் பொறுத்துக் கொண்டு தேளினைக் கரையில் தூக்கிப்போட்டார். தேள் உயிர் பிழைத்து ஓடியது. அப்போது அங்கிருந்தவர்கள் ஐயா! இரக்க குணம் கொண்ட

உங்களையே இந்த தேள் கொட்டிவிட்டது இரக்க குணம் என்றாலும் உங்களுக்கே ஆபத்தான இச்செயலில் இறங்குவது சரிதானா ? என்றனர்.அதற்கு அந்த துறவி தேளின் குணம் கொட்டுவதுதான்.அந்த அற்ப உயிரியான தேள் அதனது குணத்தில் பிடிவாதமாக இருக்கும்போது உயிரிகளையெல்லாம் நேசித்து வரவேண்டிய துறவியான நான் பிடிவாதமாக இருப்பதில் என்ன தவறு ? என்றார்.

**கடி ஜோக்ஸ்**

| | |
|---|---|
| 1. தலையிலேயிருந்து முடிகொட்டறதுக்கான காரணத்தைக் கண்டுபிடிச்சிட்டேன்.என்ன காரணம் ? | தலையில முடியிருக்கிறதுதான். |
| 2. பஸ் போகாத ரூட்எது ? | பீட்ரூட் ! |
| 3. மழையில நனையாத காய் எது ? | குடமிளகாய். |
| மழையில நனையாத இன்னொரு காய் எது ? | இன்னொரு குடமிளகாய் ! |
| 4. கோழி ஏன் முட்டை போடுது ? | அதுக்கு 1,2,3 எழுத தெரியாது. |
| 5. நாய் கடிக்கு முதல்ல என்ன செய்யனும் ? | நாய்கிட்ட போய் கால குடுக்கணும். |
| 6. பஸ்ஸில் போகும்போது என் பையில் ஒருத்தன் பிளேடு போட்டுட்டான்.அப்புறம் என்ன ஆச்சு ? | பிளேடை எடுத்து வெளியில போட்டுட்டேன். |
| 7. காக்கா ஏன் கருப்பா இருக்கு ? | அது வெயிலிலேயே சுற்றுவதால். |
| 8. பஸ் ஸ்டாண்டில் ஏன் பஸ் நிற்குது ? | அதனால் உட்கார முடியாது. |

**பெயர் எப்படி வந்தது?**

நைலான்: நைலான் இழைகளைக் கண்டுபிடித்தவர்கள்இருவர். நியூயார்க்கையும் லண்டனையும் சேர்ந்தவர்கள்.தங்களின் பெயர்களை வைக்காது பிறந்த மண்ணுக்குப் பெருமைசேர்க்கும் விதமாக நியூயார்க்கின் (New York) NY நாட்டின் முதல் இரண்டு எழுத்துக்களையும் (London) Lon முதல் மூன்று எழுத்துக்களையும் சேர்த்து நைலான் எனப்பெயரிட்டு தங்கள் நாட்டை உலகறிய நிலைநாட்டிவிட்டார்கள்.

**கணிதப்புதிர் விடைகள் :** 1) 44 சதவிகிதம் 2) 5நாட்கள் 3) மைல்களை 8ஆல் பெருக்கி 5ஆல் வகுத்தால் வருவது கிலோ மீட்டர். அதேபோல கிலோ மீட்டரை 5ஆல் பெருக்கி 8ஆல் வகுத்தால் வருவது மைல்கள்.

**விடுகதை விடைகள்** 1) கல்வி 2) வானம் 3) புகை 4) குண்டூசி 5) கடல் நீர் 6) பம்பரம் 7) மின்மினிப்பூச்சி 8)வாழை 9) நிழல் 10) காலிங்பெல்

## திருவிளையாடற் புராணம்

### 55 – சங்கத்தார் கலகந் தீர்த்த படலம்

– ‘சிவகாமியின் செல்வன்’
டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்

பெரும் புகழ் கொண்டது தமிழ் கடைச்சங்கம். அதில் உறுப்பினர்கள் 48 பாவலர்கள். அறிவு மிகின் செருக்கு மிகும். செருக்கு மிகின் சண்டை சச்சரவுகள் மிகும். சங்கப் புலவர்கள் 48 பேரும் செருக்குற்றனர். யாருடைய கவிதைகள் சிறப்பு என்பதில் கருத்து வேறுபாடு. இதனால் அனைவரும் முதல் நூலாசிரியராகிய சோமசுந்தரக் கடவுள் முன்பு சென்றனர். தம்தம் பாடல்களில் உள்ள குறை நிறைகளை எடுத்துக் கூறுமாறு முறையிட்டனர்.

அதனைச் செவி மடுத்த சோமசுந்தரக் கடவுள் ‘‘பாவலர்களே ! இந்நகரில் தனவதி என்னும் வணிகன் ஒருவன் உள்ளான் (அவனை உப்பூரிகுடிக்கிழார் என்று இறையனார் அகப்பொருள் கூறும்). அவன் மனைவி குணசாலினி. அவர்களுக்கு ஒரு மகன் தோன்றியுள்ளான். அவன் முருகனின் அவதாரம். அவன் பெயர் உருத்திரசருமன். அவன் அழகிலே மாறன். எனினும் ஊமை. அவனிடம் சென்று உங்கள் பாக்களைக் கூறுங்கள். அவன் ஏற்கும் பாடல் எதுவோ அதுவே அனைவராலும் மதிக்கப்படும் சிறந்த பாடலாகும்’’ என்று கூறியருளினார்.

அதனைக் கேட்ட புலவர்கள் ‘‘ஊமை எவ்வாறு எம்பாக்களின் திறனை ஆராயவல்லவன் ?’’ என்றனர். ‘‘ஊமையன் என்றாலும் சொல் பொருள் ஆழத்தைக் கண்டால் தலையசைத்து மனம் மகிழ்வான். தன் உடல் மொழியால், உங்கள் பாடல்களின் தரத்தை அறிந்து உரிய கருத்தினை வழங்குவான். உங்கள் முன் உள்ள ஒரே வழி இதுதான்’’ என்று கூறித் திருக்கோயிலுக்குள் மறைந்தருளினார்.

இறைவனின் அருளாணையின்படி பாவலர் யாவரும் அந்த வணிகக் குமாரனை அழைத்து வந்து தமிழ்ச் சங்கத்தில் அமர்த்தினர். பின் அவன் திருமுன்னர் அமர்ந்தனர். ஒவ்வொருவராகத் தங்கள் பாடல்களைப் பாடினர். அந்த ஊமைப்பையன், அவர்களின் பாடல்களை மிகவும் உன்னிப்பாகக் கேட்டான். பாவலர்களின் பாடல்களைக் கேட்குந்தோறும் பெரிதும் அவற்றில் ஈடுபாடு காட்டினான். சிரமசைத்தான். கரம் உயர்த்தினான். மெய்சிலிர்த்தான். விழிமொழியால் தன் வியப்பைக் காட்டினான். மொத்தத்தில் தன் மெய்ப்பாட்டினாலேயே மகிழ்ந்தும், இகழ்ந்தும், புகழ்ந்தும் தன் நேரிய கருத்தைப் புலப்படுத்தினான். தன் மனநிலையை, உளக்குறிப்பை விழி இதழ் முகம் முதலான புற உறுப்புகளால் அளந்து காட்டினான். அனைவர்க்கும் தெளிவாக உணர்த்தினான். கண்ணீர் பொழிந்து தன் உணர்வை வெளிப்படுத்தினான். அவனுடைய வெளிப்பாடு நியாயமாகவும், எல்லோரும் ஏற்கும் வண்ணம் இருந்தது. நக்கீரன், கபிலன், பரணன் ஆகிய மூவரின் பாடல்களைக் கேட்டு தரம் பிரித்து முறையே அறிவித்தான்.

பல மணிகளையும், பவளங்களையும், முத்துக்களையும் நிறுத்து அளப்பவன்போல அப்பேசா வணிகச் சிறுவன் சொல்லாழத்தையும் (சொற்சுவை – குணம்; அலங்காரம்); பொருளாழத்தையும் (பொருட்சுவை – நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை); தன் நாவினையே தராசாகக் கொண்டு நிறுத்திக் காட்டினான். நன்னெறியினை அறிந்த பாவலர்கள் யாவரும் தமக்குள் உண்டான செருக்கை ஒழித்தனர். வேற்றுமை கலகத்தைக் கைவிட்டனர். மெய்யன்பும் நட்பும் பூண்டு வாழ்ந்தனர். தெய்வப்புலவர்கள் குற்றமற்ற நூல்களை ஆய்ந்து சிறப்புடன் விளங்கினர், ஊமைப் பையனால் தெரிவு செய்யப்பட்ட நக்கீரன், கபிலன், பரணன் ஆகியோர் பாடல்கள் உலகிலே பரவி உயர்ந்த பாக்களாகச் சிறந்தோங்கின.

வாய்மொழியால் விளக்கமுடியாத உணர்வை மெய்ம்மொழி (விழி, மூக்கு, நெற்றி, இதழ், மொத்த முகம், கைகள்) செம்மையாகப் பிசிர் இன்றி விளக்கிவிடும். நீதி வழங்கல் என்பது தெய்வாம்சம். பசுவிற்காக தன் மகனைத் தேர்க்காலில் ஏற்றிக் கொன்ற மனுநீதிச்சோழன், அடைக்கலமான புறாவிற்காக தன் தசையை அறுத்தளித்த சோழன் சிபி, பிணை கொடுத்தும் காக்க முடியாமைக்காக எழுபது வேளாளர்களும் பழையநல்லூரில் தீக்குளித்த வரலாறும், தவறான தீர்ப்புக்காக உயிரை விட்ட பாண்டிய நெடுஞ்செழியன் என இம்மண்ணில் வாழ்ந்த வரலாற்று நாயகர்களின் பட்டியல் உயர்ந்துகொண்டே இருக்கும். ஒருபாற்கோடாமை சான்றோர்க்கணி.

# மெய்கண்டார் வரலாறு

(தொடர்ச்சி)

மொத்தம் நாற்பதே வரிகளில், 12 சூத்திரங்கள் என்னும் குறட்பாக்களைக் கொண்ட உயர் சிவஞானபோதம் என்று போற்றப்படும் இந்நூலைத் தலைநூலாகக் கொண்டு, வழி நூலாக சிவஞான சித்தியார், சார்பு நூலாக சிவப்பிரகாசம் மற்றும் துணை நூல்களாகவும்முதுநூல்களாகவும்இயற்றப்பட்டுஉள்ள 14 சாத்திர நூல்களை இலக்கணமாகவும், 12 திருமுறை என்னும் தோத்திர நூல்களை இலக்கியமாகவும் கொள்வர் ஆன்றோர்.

'மெய்கண்டார்' அப்படிப்பட்ட புகழ் மிக்க சிவஞானபோதம் நூலை அருளிய அருட்குரவர் "மெய்கண்ட தேவரை அவ் இறைவரே என்று கூறுவதன்றி வேறு யாரென்று கூறுவது?" என்பார் திருமுருக கிருபானந்த வாரியார் தனது புத்தகத்தில்.

அருட்குரவர் மெய்கண்டாரைப்பற்றிய பல அரிய செய்திகள், ஆய்வுகள் மற்றும் கல்வெட்டுகளை ஒருங்கிணைத்து "மெய்கண்டார் வரலாறு" என்று புத்தகமாக 1954–ல் வெளியிட்ட அருளாளர் மறைந்த விருத்தாசலத்தில் வாழ்ந்த வழக்கறிஞர் பெண்ணாடம் குருகுலராய அரங்கசாமி பிள்ளையின் அரும்பணிக்கு தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

இரண்டாம் பதிப்பாக 1958–ல் வெளிவந்த இந்த நூல் வரும் தலைமுறையினருக்கு பயனுள்ளதாக அமைந்து, மெய்கண்டாரின் புகழ் இத்தரணியில் நிலைத்து நிற்கும் நோக்கில் இந்த நூல் சுமார் 70 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் அச்சிடப்பட்டுள்ளது.

"புத்தக வெளியீடு"

இந்த சிறந்த நூலின் முக்கியத்துவம் கருதி, நமையாளும் தருமையாதீனம் 27–வது நட்சத்திர குருமணிகளின் பெருங்கருணையால், மே 3–5–2025–ல் நடைபெற்ற அனைத்துலக சைவ சித்தாந்த மாநாட்டில் உலகெங்குமிருந்து 14 க்கும் மேற்பட்ட நாட்டு ஆன்றோர்கள் முன்னிலையில் வெளியிட்டது நமது கார்குலத்திற்கு பெருமை சேர்க்கும் நிகழ்வாக அமைந்தது.

"புத்தகம் வெளியிட்ட ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகளின் மிகவும் சுவாரஸ்யமான" ஆசியுரை :

4–5–25 அன்று அனைத்துலக மாநாட்டில் தருமையாதீன நட்சத்திர குருமணிகள் முன்னிலையில், "மெய்கண்டார் வரலாறு" நூலை பூஜ்ய ஸ்ரீ சங்கராச்சாரியா சுவாமிகள், ஹரிஹரபுர சங்கர மடம் (கர்நாடகா) அவர்கள் வெளியிட்டு உரை நிகழ்த்தியது தனிச்சிறப்பு.

மெய்கண்டாரைப்பற்றி கூற ஆரம்பித்து திராவிட ஆகம சைவ சிந்தாந்த புனிதத்தை முன்னெடுக்க வேண்டும் என்றும், அருமையாக தமிழில் பேசி அன்பான வார்த்தைகளால் அலங்கரித்து, நாம் எல்லாம் நமது புனிதமான சைவ சிந்தாந்தத்தை கடைப்பிடித்து, பாதுகாப்பது நமது தலையாய கடமை என்றும், தருமையாதீனத்தின்பால் தமக்குள் எழும் இனம் தெரியாத ஈர்ப்பை உணர்வதையும் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தும் அந்த மகானின் பேச்சைக் கேட்க வாய்ப்பளித்த நமது குருமணிகள் பாதம் பணிகிறோம்.

இந்த மெய்கண்டார் வரலாறு புத்தகத்தை இந்த மாநாட்டில் தலையாய மெய்கண்டார் அரங்கத்தில் நிகழ்ந்த பெரு விழாவில் வெளியிட்டு மகிழ்ந்தது கருணை உள்ளம் கொண்ட நமது குரு மணிகள் மெய்கண்டாரின்பால் தாம் கொண்டுள்ள தனிப்பெரும் பக்தியை வெளிப்படுத்தும் பாங்கு நம்மையெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறது.

இந்தப் பெருவிழாவில் நமது கார்காத்தார் சங்க தலைவர் திரு. KKR. சுரேஷ் மெய்கண்டார் பேரவைத்தலைவர் என்ற முறையில் அந்த புனித மேடையில் பங்கேற்று சிறப்பித்தது மேலும் பெருமை. எல்லாம் குருவருள்.

"அமரர் செ. இராதாகிருஷ்ணன் நூற்றாண்டு"

மெய்கண்டார் வரலாறு என்ற இந்நூலினை சைவ நல்லுலகிற்கு அப்போது வெளியிட ஊக்குவித்து, உறுதுணையாக இருந்தவரும், உயர் பொறுப்பில் இருந்தாலும் சைவமும் தமிழும் கண்களாகப் போற்றி வாழ்ந்து வழிகாட்டியவருமாகிய பெண்ணாகடம் குருகுலராய அமரர் செ. இராதாகிருஷ்ணன் பி.இ (Hons), FIE (1925 - 1977) அவர்களாவார்.

எழுத்தாக்கம் – R. குஞ்சிதபாதம்

# நூற்றாண்டு விழா நினைவு அஞ்சலி



**1925 - 2025**

நம் இன மக்கள் எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு உழைத்து மறைந்த காட்டுமன்னார்கோயில் வட்டம், ஆட்கொண்ட நத்தம் மாயலுட

தெய்வத்திரு. **C. பழமலை பிள்ளை - கௌசலா அம்மாள்**

தம்பதியினரின் நூற்றாண்டு விழா கடந்த **22–6–2025** அன்று சிதம்பரம் எஸ்.ஆர். நகர் இல்லத்தில் நடைபெற்றது. அது சமயம் நடைபெற்ற நூற்றாண்டு நிகழ்ச்சியிலும் அதனை ஒட்டி நடைபெற்ற "திருமுறை இசை அரசு" அக்காரமங்கலம் இரா. பாலசுப்ரமணியன் குழுவினரின் இன்னிசையோடு கூடிய "திருமுறை பாராயணம்" நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு சிறப்பித்த கார்குலப் பெரியோர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

**ப. ஞானசேகரன்,** வழக்கறிஞர்
குடும்பத்தினர் மற்றும் வாரிசுகள்.

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்:
**10–05–1950**

மறைவு:
**12–07–2024**

## தெய்வத்திரு N. வசந்தா அவர்கள்

சிதம்பரம் வட்டம் தெற்கு விருதாங்கநல்லூர் G. நடராஜன் பிள்ளை அவர்களின் மனைவி **N. வசந்தா** அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள்

கணவர் : **கோ. நடராஜன் பிள்ளை** (ஓய்வு ஆசிரியர்)

மகன் : **ந. முரகன்**

மருமகள் : **இந்திராணி முரகன்**

மருமகன் : **S. பிரகாஷ்**

பேரன் : **K.P. தினேஷ்**

பேத்தி : **P. நிவேதா**

மற்றும் **உறவினர்கள்**

## “நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்”



**மண்ணுலகிற்கு**
*15-06-1946*

**விண்ணுலகிற்கு**
*18-08-2023*

மயிலாடுதுறை மாவட்டம் **உளுத்துக்குப்பையை** சேர்ந்த காலஞ்சென்ற
**திரு முத்தையா பிள்ளை - செல்லம்** அவர்களின் மருமகளும்,
முன்னாள் உளுத்துக்குப்பையை கிராம **கார்காத்தார் சங்கத் தலைவர்**
காலஞ்சென்ற **திரு பாலன் பிள்ளை** அவர்களின் அன்பு மனைவி

# திருமதி B. ராஜேஸ்வரி அம்மாள்

அவர்களுக்கு


**இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி**

**நாள்: *18-08-2025***

**என்றும் அவர்களின் நல்லாசியுடன்**

**RAMS COMPUTECH**
Banking & IT Consumables

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்ந்தது
27.11.1939

உதிர்ந்தது
02.08.2024

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்**

இந்த குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்

## சிதம்பரம், வாகீச நகர் திரு. வெ.சுவாமிநாதன் பிள்ளை
ஆசிரியர் (ஓய்வு)

(மயிலாடுதுறை மாவட்டம், மாப்படுகை, தெய்வத்திருவாளர்கள்.
S.வெங்கடாஜலம் பிள்ளை-அவையம்மாள் ஆகியோரின் அன்பு மகன்)

அப்பா என்ற சொல்லுக்கு அர்த்தமாய்!
வாழ்ந்து மறைந்த உங்கள் நினைவுகள் மட்டும் இன்று துணையாய்!

என்றும் நீங்கா நினைவுகளுடன்...

மனைவி: திருமதி. **S.வசந்தகுமாரி**

மகள்கள்:
திருமதி. **சு.தமிழ்செல்வி**
திருமதி. **சு.சிவகாமசுந்தரி**
திருமதி. **சு.வளர்மதி**

மருமகன்கள்:
திரு. **சு.இராஜசேகர்**
தெய்வத்திரு. **R.முருகன்**
திரு. **ஜெ.வை.செந்தில்**

பேரன்கள்:
**R.அருண்குமார்,**
**M.விஜயபிரகாஷ்**
**M.ஆகாஷ்கார்த்திக்,**
**V.S.அர்ஜுன், V.S.அஜீத்**

# முதலாமாண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
15.08.1937

மறைவு :
01.08.2024

## N. மங்களம் பிள்ளை, Teacher Rtd.

காட்டுமன்னார் கோவில் வட்டம் வீராணநல்லூர் கிராமம், வெள்ளாழத் தெரு, தெய்வத்திரு. நடேசன் பிள்ளை – கோகிலம் இவர்களின் மகனும், தெய்வத்திரு. குஞ்சிதபாதம் பிள்ளை – சரஸ்வதி இவர்களின் மருமகனும் திருமதி சேது அம்மாள் அவர்களின் கணவரும் எங்களது தந்தையாருமாகிய **N. மங்களம் பிள்ளை** அவர்களின் **முதலாமாண்டு நினைவு நாள் 01.08.2025.**

என்றும் உங்கள் நினைவில் வாழும்

**M. சேது அம்மாள்**

**M.S. ஆனந்த்** **G.நிரஞ்சனா** **M. ஸ்ரீதர்**

**N. இராஜவல்லி** **P. கணேஷ்** **V. புஷ்பலதா**

**A.R. தன்வந்த்** **S.P. ஆதித்யா**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
10–08–1944

மறைவு:
07–07–2025

## திரு. R. கோபாலகிருஷ்ணன் பிள்ளை

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம் அம்மாப்பேட்டை எங்கள் தந்தையார் திரு. **R. கோபாலகிருஷ்ணன் பிள்ளை** அவர்கள் (சிதம்பரம் நகர கார்காத்தார் சங்க செயலராக 10 ஆண்டுகள் பணியாற்றியவர்) விசுவாவிசு ஆண்டு ஆனி மாதம் 23–ம் தேதி (7–7–25) திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் வைகுண்ட பதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்**

**G. சகுந்தலா - R. வத்சலா**

**உங்கள் நினைவுகளுடன் வாழும்**

மகன்கள்
**G. மணிவாசகன்**
**G.V. அருள்மொழிச்செல்வன்**

மகள்கள்
**G. மல்லிகா**
**G. ஸ்ரீதேவி**

மருமகள்கள்
**V. கிறிஸ்டி**
**R. சுகந்தி**

மருமகன்கள்
**E. கோவைநாதன்**
**K. பிரபாகரன்**

மற்றும்

**பேரன், பேத்திகள், கொள்ளுபேரன், கொள்ளுபேத்திகள் உறவினர்கள்.**




**SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM**
**SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION**

## WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

## CUT DOWN YOUR ELECTRICITY COST

**MARUTHI POWER CONTROL SYSTEM**

**CALL US @ 9841828077**

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com



S.SELVAKUMAR - C.E.O

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th August 2025

CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

**We Thanks V. Ramadoss Chettiar has served with dedication as the Arya Vysya Thalaivar, for staying at our hotel with his family, and blessing us with their presence...**



Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**